ஓம்

# மில்க்வைற் செய்தி
# Milk White News


தபாற்பெட்டி இல. 77, யாழ்ப்பாணம். தொலைபேசி: 23233

கௌரவ ஆசிரியர்: திரு. க. சி. குலரத்தினம் ★ மார்கழி 1987 ★ இதழ் - 144

# எண்பத்தேழு, போய் வா.

**நாங்கள் ஒவ்வொரு ஆண்டுக்கும் பிரியாவிடை கொடுத்து, அடுத்துவரும் ஆண்டுக்கு வரவேற்புக் கூறுதல் வழக்கம்.**

ஆனல் [இந்த] எண்பத்தேழுக்குப் பிடித்த தடிமன் மாருமலே எம்மை விட்டுப் போகிறது. இல்லை இல்லை அடுத்துவரும ஆண்டுக்கும் தடிமனைத் தொற்றவைத்துப் போகிறது. மூக்குள்ள வரை சளி போகாது என்பது உண்மையாகிவிட்டது.



வாரணசி என்னும் காசியில் குமரகுருபர சுவாமிகள் மடத்தில் திருப்பனந்தாள் மடாதிபதிகள் தலைமையில் தொழிலதிபர் பஞ்சபுராண வெளியீட்டில் பேசுகிறுர்.

எண்பத்தேழு எம்மை ஓரளவுக்கு வருத்திவிட்டது என்று உலகம் முழுவதும் அறிந்துவிட்டது. வரலாற்ருசிரியர் உன்னை ஆழமாக வரைந்து எதிர்காலத்தவர் அறியும் வகை செய்வார்கள். அவுணர், அசுரர் காலத்தோடு உன்னையும் சேர்த்து விடுவார்கள். இதனுல் 2087 ஆம் ஆண்டுக்கும் வசையுண்டாகுமோ என நினைக்கவேண்டியுள்ளது. பேயோடு கூடிப்பிரிவதும் மன வருத்தம் என்பர். வருத்தம் என்னவாயினும் நீ போய் வா.

★ சேவை செய்பவனிடம் வேற்றுமை கிடையாது ★

உ
சிவமயம்



# கடவுள் வணக்கம்

## சுந்தரமூர்த்திநாயனார் தேவாரம்

### திருமுதுகுன்றம்

பண் - நட்டராகம்

திருச்சிற்றம்பலம்

ஏத்தா திருந்தறியேன் இமையோர் தனிநாயகனே
மூத்தாய் உலகுக் கெல்லாம்முது குன்றமமர்ந்தவனே
பூத்தா ருங்குழலாள் பரவையிவள் தன்முகப்பே
கூத்தா தந்தருளாய் கொடியேன்இட் டங்கொளவே.

திருச்சிற்றம்பலம்

தேவர்களுக்கு நிகரற்ற தலைவரே, எல்லா உயிர்களுக்கும் மூத்தவரே, திருமுதுகுன்றம் என்னும் திருத்தலத்தில் விரும்பி எழுந்தருளியுள்ளவரே, கூத்துடையவரே, தேவரீரை அடியேன் பாடாமல் இருந்ததை இதுவரை அறியேன். ஆதலால் தேவரீர், மலர்கள் பொருந்திய கூந்தலையுடையவளும் பரவையார் என்னும் பெயருள்ளவளுமாய இவளுக்கு முன்னே, அடியேனுடைய இன்பங்கெடுமாறு செம்பொன்னைத் தந்தருளுவீராக.




## பொருள் செயல் வகை

(பொருளீட்டும் வகையும் பயன்படுத்தும் வகையும்)

"அருளொடும் அன்பொடும் வாராப் பொருளாக்கம்
புல்லார் புரள விடல்."

அருளொடும் அன்பொடும் பொருந்திவராத பொருளின் ஆக்கத்தை அனுபவித்து மகிழாது நீக்கிவிடுதல் வேண்டும்.

## On acquiring wealth

*The wealth that did not come with grace and love the person shall not touch.*

# Learn Your English

## Some Synonyms

(Words with the Same meaning)

1. **Ability** — power, skill, talent, capacity, efficiency, cap bility, competency
2. **Abode** — house, residence, dwelling, lodging domicile
3. **About** — almost, roughly, nearly, approximately
4. **Absolute** — unlimited, complete, entire, perfect unmixed
5. **Acccpt** — approve, assent, agree, admit, confirm, take, believe
6. **Act** — work, perform, show, display
7. **Actual** — real, certain, true, genuine, presen
8. **Admit** — grant, give, concede, yeild, own, avow.
9. **Advise** — tell, instruct, inform, aquaint, notify
10. **Affection** — love, devotion, fondness, liking feeling.

## இந்துநாகரிகம்

இந்துநாகரிகம் தரமான வாழ்வுமுறை என்பதோடு பண்பாடு பயின்றுவரும் வாழ்வுமாகும். உடம்போடு கூடிய வாழ்வுக்கு அப்பால், உயிர்சம்பந்தமான ஆன்மிக முன்னேற்றப்பாதையும் இதிலடங்கும்.

நம் வாழ்வைச் சீராக்கி நம்மை வழிநடத்துவதற்கு நம் முன்னோர் வகுத்துவிதித்த வரன்முறையில் விழாக்கள், விரதங்கள் பண்டிகைகள் ஒருசில. இவை ஆண்டு முழுவதும் நிரம்பி நிலவுகின்றன. எந்த நாளும் நல்ல நாளே என்று கொள்ளுமளவில் எமக்குக் காலப்போக்கு அமைந்துள்ளது. நமது சித்தம் சுத்தமாகவும் சக்தி நிறைந்ததாகவும் அமைவதற்கு விரதங்கள் அநுகூலமானவை. பலருக்கும் அது பயன்பட்டுப் பரவலாக நிலவும்போது பண்டிகையாகவும், விழாவாகவும் மலர்கின்றது. அது நம்பிக்கையோடும், மகிழ்ச்சியோடும் நடைபெறுவது. அது வழிபாட்டோடு கலந்து வரும்போது பக்தி தானே உண்டாகி, உடந்தையாய் நின்று உற்சாகமளிக்கிறது. சாதாரண நாளில் ஒருவேளை உணவு தாமதித்தால் தாங்கிக்கொள்ளாத ஒருவர் விரதவேளையில் நாள் முழுவதும் நீராகாரம்தானுமில்லாமல் இருக்கிறார் என்றால் அது பக்தியின் பலத்தால் வந்தது என்றே சொல்லுதல் வேண்டும். பக்தியின்பாலரானோர் விழாக்களில் ஒருவரையொருவர் காணும்போது தலை தாழ்த்திக் கைகூப்பி வணங்கிக்கொள்ளும் ஒரு பண்பாடு உண்டாகிறது.

உ

## தமிழன்னை

அன்பு நிறைந்தவள் தமிழன்னை
அருளை அறிந்தவள் தமிழன்னை
இன்பக் கலைகள் யாவையுமே
ஈன்று வளர்த்திடும் தேவியவள்

பக்தி நிறைந்தது தமிழ்மொழியே
பரமனைத் தொடர்வது தமிழ்மொழியே
சக்தி கொடுப்பவள் தமிழ்த்தாயே
சமரசம் உரைப்பவள் தமிழ்த்தாயே

வண்மை மிகுந்திடும் மனமுடையாள்
வாய்மையை வணங்கும் இனமுடையாள்
தன்மை அளித்திடும் இலக்கியத்தாள்
தாரணி புகழ்ந்திடும் இலக்கணத்தாள்

மாநிலம் முழுவதும் ஓர்சமுதாயம்
மக்களுக் கெல்லாம் ஒருநியாயம்
தானென அறிஞர்கள் தலைவணங்கும்
தருமம் வளர்த்தவள் தமிழணங்கே

அன்னிய மொழிகளை அருவருக்கும்
அற்பத் தனங்களை அவள்வெறுக்கும்
நன்நயம் மிகுந்தவள் தமிழ்மாதா
நாகரிகத்தின் தமிழ்த் தூதாம்.

— நாமக்கல் கவிஞர்


## ஊரும் பேரும் வாழவேண்டும்

இன்று ஆயிரக்கணக்கான மாணுக்கர், மாணுக்கியர் நடந்தும், வண்டி வாகனங்களில் சென்றும் போக்குவரத் துப்புரிகின்ற பிறவுண்வீதி வாழ்க. பிறவுண் சின்னத் தம்பியார் என்பார் பழைய வேம்படிப் பாடசாலையில், பேர்சிவல் பெரியார் வருவதன் முன் வணக்கத்துக்குரிய ருேபேட்ஸ் என்பாரின் பாடசாலையில் தலைமையாசிரியரா யிருந்த படிப்பாளி.

அவருக்கு உதவியாக இருந்தவர்கள் மக்கென்ஸ்ரீ கனகரத்தினம், வைமன் கதிரைவேற்பிள்ளை முதலானே ராவர். பிறவுண் சின்னத்தம்பியாரின் நினைவாக நிலவும் வீதி வாழவேண்டும். தூய்மை நிலவுதல் வேண்டும்.

## வட்டுக்கோட்டை வேளாளன்

அந்தக் காலத்திலே இன்னுர் இன்ன பட்டியைச் சேர்ந்தவர்கள் என்று பெருமைப்பட பலர் வாழ்ந்தார் கள். வட்டுக்கோட்டை வேளாளன், முத்துக்குமாரு சிதம்பரப்பிள்ளை என்பவர் சங்குவேலியிலிருந்து கால் நடையாக வந்து மத்திய கல்லூரியிற் கற்பித்துவிட்டு மாலையில் மீண்டவர். அவர் வரும் போதும் போகும் போதும் மாணுக்கர் ஓடியோடிப் பின்தொடர்ந்து படித் தார்கள். வெள்ளைக்கார ஆசிரியர்களுக்கே கேத்திர கணிதம் விளங்க வைத்த சிதம்பரப்பிள்ளை நியாய விலக் கணமும் செய்தவர், பெரிய தமிழ்ப்புலவர். பெரிய நாற் கடகம் போன்ற தலைப்பாகை அணிந்தவாறு, நீண்ட கோட்டும், பஞ்சகச்சும் அணிந்தவர். அவரின் பெயர் மாற்றம் நெவின்ஸ் என்பதாகும். அவரை வெள்ளைக்காரர் யூகிளிட் எனக்கொண்டாடினர்.




## இயற்கையோடு இணைக

அடுப்பை அணையவிட்டு உணவுச்சாலையில் எடுப்பை எடுத்துப் பகிர்ந்துண்டு வாழும் முறை சில இடங்களில் தலையெடுக்கிறது. கண்ட பாவனையில் இன்னும் நான்கு பேர் அதைப் பின்பற்றினுல் இல்லம், வீடு, கிருகம், உறை விடம், மனை எல்லாம் மங்கலகரமில்லாமல் போகும். வீட்டிலே மனையாள், மாமி, தாய், சகோதரி சிந்தனையோடும் சிரத்தையோடும் சுத்தமாகவும் சுகாதாரமாகவும் சமைத் துத்தருமாப்போல் சுப்பர் ஹோட்டல் உணவு தயாரிக் குமாமோ?

எங்கள் வரண்ட பிரதேசத்தில் உடலுக்கு ஊட்டம் தரும் உழுந்து அதிகமாகக் கிடைக்கும் போது, எந்நேரமும் பயன் படுமளவில் அப்பளம் உற்பத்தியாகிறது. இயற்கை யாய் விளையும் பிரண்டை, தூதுவளை, சுண்டங்காய், மணித்தக்காளி, பொன்னுங்கண்ணி, ஆவாரை, இஞ்சி வேப்பம் பூ முதலியன வீட்டில் வற்றலாகி, வடகமாகி, அப்பளமாகி நமக்குப் பயன் தருகின்றன. மிளகுதண்ணி, சுக்குக்கசாயம் முதலியன வெள்ளைக்காரர் வாழ்வையே மலர்ச்சி பெறச் செய்துள்ளன. ஊறுகாய் செய்தல், வடகம், வற்றல், அப்பளம் தயாரித்தல் ஏழைகளின் வறுமையைப் போக்கும் குடிசைத் தொழிலுமாகும்.

## அறிந்து கொள்ளுங்கள்

1. ஒரு இருத்தல் தேனில் 1000 துளிகள் அடங்கும்
2. சீனர் பழைய முட்டையை விரும்பி உண்பர்
3. திபெத்தில் குடும்பத்துக்கொரு துறவி இருப்பர்
4. மூன்றில் இருபாக ஆபிரிக்கா வடகோளத்தில் உள்ளது
5. வாய்க்கால்கள் கூடிய நகரம் வெனிஸ்
6. பக்கிங்காம் அரண்மனையில் 1000 அறைகள் உண்டு
7. சென்பீற்றேஸ் தேவாலயத்தில் 7500 மக்கள் இருக்கலாம்
8. ரிறினிடாட் தீவினருள் பெரும்பான்மையினர் இந்துக்கள்
9. தெருவிளக்கேற்றிய முதல் நவீன நகரம் பரீஸ்
10. நான்கு நதிகள் நனைக்கும் நகரம் மான்செஸ்ரர்
11. றஷ்யா மேற்குக் கிழக்காக 7000 மைல் நீளம்
12. பாலஸ்தீன நாட்டுக்கு எட்டுப் பழைய பெயர்கள் உண்டு

★ கீழ்த்தனமான செயல் விலங்கு மனப்பான்மையது ★

13. பிரித்தானிய பிரதமரின் டவுணிங்வீதி 150 யார் நீளமானது
14. அமெரிக்காவில் இரண்டு கோடி ஏக்கர் நிலம் நகரங்கள்
15. அமெரிக்க ரெனிசி மாநிலத்தை வேறு 8 மாநிலங்கள் தொடுக்கின்றன
16. கலிபோணியா நகரில் அதிக பற்பசை விலையாகிறது
17. அலெஸ்கா மாநிலம் 586,400 சதுரமைல் பரப்பினது
18. அமெரிக்காவில் பொஸ்ரன் மிகப்பெரிய மீன்துறை
19. அமெரிக்கா மலைகளில் பெரும்பாலானவை கொலருடவில் உள்ளன
20. அமெரிக்காவில் மரக்கறி மலிவான இடம் கலிபோணியா

# பிரிந்தவர்களுக்கு அஞ்சலி உற்றார் உறவினர்களுக்கு அநுதாபம்

இவற்றுக்கு மேல் நாம் என்ன செய்யலாம். எல்லாம் எப்பவோ முடிந்த காரியம். ஒரு பொல்லாப்பும் இல்லை. தருமராசன் தமது பதிவேட்பாளர் சித்திரபுத்திரனுக்கு அண்மையில் சிரமம் கொடுத்துவிட்டார் போலும். பதிவேட்டில் பதியப்பட்டவர்கள் தங்கள் தூலவுடல் நீத்துச் சூக்கும உடல் தாங்கிக் காரணநிலையில் அடங்கிவிட்டார்கள். அவர்களின் பூர்வஜென்மப் புண்ணிய பாவங்கள் பரிசீலிக்கப்பட்டு வருகின்றன.

நாங்கள் ஏதும் அறியாமல் எங்கள் கண்களை அகல விழித்து நோக்கும்போது, அயலில், ஊரில், நாட்டில் பலரைக் காணோம். இவர்கள் இடம் பெயர்ந்தமை கால மாயும் அகாலமாயும் அமைந்தனவாகும். என்னே பிரிவுத் துயரம்!

மில்க்வைற் தொழிலகத்தின் அமுதசுரபி வற்றாத பால் வளச்சுரபி காயத்திரி அகால மரணமானமை மனவருத்தம்.

தொழிலகத்தின் உழைப்பாளி அரியாலையூர் பாலசுந்தரம் என்னும் கிட்டுவின் அன்பு மனைவி கிருஷ்ணதேவி தமது இளமைப்பருவம் வாடுமுன் பாலினி, பாலாஜி, பாலஜெயா, பாலஸ்ரீக்கா, பாலசுகிர்தா ஆகிய புதல்வியாரைத் தவிக்கவிட்டுப் போய் விட்டார்.

ஏழாலையூர் தந்த உழைப்பாளிகளுள் கடும் உழைப்பாளிக்கு வீடு தேடி வந்த வினைப்பயன் பாதகமானது. கொடுக்கிற தெய்வம் முகட்டைப் பிரித்துக் கொடுக்கும் என்பர். கொண்டுபோன தெய்வம் வீட்டையே சிதைத்துக்கொண்டு போய்விட்டது. இளமை மிடுக்கில் மாடாய் உழைத்த உழைக்கும் கரத்தை ஏடாய் எழுதினாலும் போதாது. தொழிலதிபர் இத்தொழிலாளர் பிரிவை மறக்க முடியாமல் மனமுடைந்து போனார்.

செந்தமிழ்த் தொண்டன், தென்மராட்சியில் தேன் தமிழ்ச்சங்கம் ஆரம்பித்த அளவெட்டியூர் தம்பு சுப்பிரமணியம், முருகன் என வழங்கியவர். அவர் முடங்கி இருந்தும் முத்தமிழ்ப் பற்றை மறவாத அன்பர் அவரும் போய் விட்டார்.

ஞானபண்டித வித்தியாலயத்தை நல்ல முறையில் வளர்த்த அதிபரும், எம் பழைய மாணாக்கனுமாய தர்மலிங்கம் புன்சிரிப்போடு எம்மைப் பிரிந்துவிட்டார்.

நாம் படும்பாடு நவிலும் பஞ்சுதான் படுமோ என்றாற் போல, மஞ்சள் தேறு போன்றவர். ஆணழகன், இனிய வுரையினன் செயல் வீரன் இராசரத்தினம் வெறும் ஆசிரியன் அல்லன். குரும்பசிட்டி ஈழகேசரிப் பொன்னையா வள்ளலின் பணிகளைத் தொடர்ந்து, சன்மார்க்க சங்கத்துக்கு உயிர் மூச்சாய் ஓடித் திரிந்துழைத்தவரின் ஓட்டம் தடைப்பட்டதே. சேவைக்கொரு இராசரத்தினம் இன்று இல்லையே.

தென்னாட்டுத் தமிழ் வட இலங்கை வழியாக தென்னிலங்கைப் பாணந்துறை வரையும் பரவி, தாந்திரிமுல்ல என்னும் மூலையில் ஆஜானுபாகுவாய டொன் டேவிட் நாணயக்கார என்னும் சிங்களப் பெரியாரையும் தாவிப் பிடித்தது. அன்னார் தமிழ்ப் பேரன்பர். தமிழில் நன்றாக எழுதுவார் பேசுவார். அவர் தமிழ் நூல்களைச் சிங்களத்துக்கும், சிங்கள நூல்களைத் தமிழுக்கும் பெயர்த்தவர். அவரின் தமிழ்ப்பணிக்கு உதவியாயிருந்த பாரியார் அக்னஸ் பத்மசிலியும் நம்மைவிட்டுப் பிரிந்துவிட்டார்.

விண்ணின் பயனும் பெருமழை, வேதப் பயனும் சைவம், கண்ணின் பயனும் பேரொளி, கருத்தின் பயனும் எழுத்து ஐந்து, பண்ணின் பயனும் இன்னிசை என்றாற் போல எங்கள் பிரதேசத்தில் பண்ணோடு திருமுறை பாடி வந்த ஓதுவாமூர்த்தி *V.T.V.* சுப்பிரமணியம் மண்ணை விட்டு விண்ணைத் தாவியமை விதியின் செயலாகிவிட்டது.

பசுபதிச் செட்டியார் பரம்பரையில் வந்த பண்புள்ள சைவத்தமிழன், காணி நில அபிவிருத்திப்பகுதி அதிகாரி திருஞானசம்பந்தம் வெளியே போனவர் வீடு திரும்பாமலே விண்ணுலகம் புக்கார் என்பது நாளடைவில் அறியக் கிடைத்தது. அழுதால் துயர் தீருமா? அப்பனே வைத்தீஸ்வரா! அம்மை தையல்நாயகியே கேள்!

# சூழல் கல்வியில் மழை

பழைய காலத்து மன்னன் ஒருவன் வேட்டையாடப் போன வழியில், சலவைத் தொழிலாளி மழை வரும் கவனம் என்று எச்சரிக்கை செய்தான். மந்திரி முதலானோர் அவன் பேச்சைக் கவனிக்காமல் சென்று அடைமழையில் தோய்ந்து மீண்டனர். அடுத்தநாள் மன்னன் சலவைத் தொழிலாளியை அழைத்து வினவிய போது அவன், தனது கழுதையின் காதுகள் குவிவதும் விரிவதும் கொண்டு தான் மழையைப்பற்றி அறிவதாகக் கூறினான்.

ஆற்று வெள்ளம் நாளைவரத் தோற்றுதே குறி என்று தொடங்கும் பாடல் ஒன்றுண்டு. அதில் நண்டுகள் சேறு கொண்டு புதர்களை அடைப்பதால் மழைவரும் எனக் கருதலாம் எனவுள்ளது.

மழைவரப் போவதை மயிலும் குயிலும் அறியும் கூச்சலிடும். நாய்கள் ஒடுங்கிக் கிடக்கும். பன்றிகள் அங்கு மிங்கும் குறுநடை நடக்கும். பூனை புல்லைக் கடித்தால் மழை வரும் என்பர். நத்தையினமும் தலைநீட்டி மரங்க

★ கயவருக்கு நல்லாரிணக்கம் வேதனை தரும் ★

ளிலும் மதில்களிலும் ஏறும். சிலந்திப் பூச்சிகளும் போரி டாமல் ஒருமிக்கச் சேர்ந்திருக்கும். சுறுசுறுப்புள்ள எறும் புக்கூட்டம் முட்டையைக் கௌவிக் கொண்டு உயரமான பகுதிகளை நோக்கி ஏறும். "முட்டை கொண்டு திட்டை யேறின் மழை" என்பது நாட்டுமொழி. ஈயும் கொசுவும் தரைமட்டத்தில் மொய்த்து பறக்கும். சொறித்தவளை மழை வரு முன்பே வரவேற்பு முரசு அடித்தாற் போலச் சத்தமிடும். சில தவளைகளின் பச்சைநிறம் மாறி வெண் சிவப்புநிறம் கொள்ளும். இன்னும் தேரை மறைவைவிட்டு வெளியே வந்தால் மழை வரும். ஆமைகள் விரைவாக உணவு உண்டால் மழை வரும். பூனை நிலத்தைக் கீறி னாலும் மழை பெய்யும். இவை முற்றாக முடிந்த முடிபு கள் என்று சொல்ல முடியாவிட்டாலும் முக்கால் பங்கா வது உண்மையாகும்.

## உலகத் தமிழாராய்ச்சி
### ஆறும் பெருவிழா

ஒரு காலத்தில் உலகமளாவிய தமிழ்மொழி, இடை யில் வியாபகம் குறைந்து ஒரு பிரதேசத்துள் நிலவி வந்தது. வேதகாலத்திற்கும் முற்பட்ட மொகஞ்சதரோ நாகரிகம் தமிழ் நாகரிகம் என்பதை ஐரோப்பிய ஆராய்ச்சியாளர் கண்டுள்ளனர். இன்னும் சுமேரிய நாகரிகம் யப்பா னிய நாகரிகம் எல்லாம் தமிழோடு உறவு கொண் டுள்ள தன்மையை ஆராய்கிறார்கள். தமிழ் ஒரு மொழி. அது உலக முதுமொழி. தமிழ் ஒருகாலத்தில் இலங்கைக் குத் தென்புறமாக மிகப் பெருமளவில் பரந்திருந்த நிலப் பரப்பில் நிலவி வந்தது. அங்கே காலந்தோறும் மதுரை, கபாடபுரம் முதலாய நகரங்களில் தமிழாராய்ச்சி நடை பெற்றது. பழைய மதுரையும், கபாடபுரமும் கடல் கொள்ளப்பட்ட பின், எஞ்சிய நிலப்பரப்பில் ஒருபகுதியே இலங்கை.

இலங்கை என்றால் ஆற்றிடைக்குறை என்றும் பொருள். அது இலங்கியதால் இலங்கை என்றும், பொன் போல் இலங்கியதால் பொன்னாடு என்றும் பெயர் பெற் றது. உலகில் மிக மூத்த மொழியாய தமிழ், பல்வேறு மொழிகளுக்குத் தாய்.

தமிழ் எத்தனையோ ஆக்கங்களையும், நிலைபேறுகளை யும் அழிவுகளையும் கண்டும், தான் அழிந்தொழியாது சீரிளமைத் திறத்தோடு சிந்தனை வளத்தோடு அன்று போல் இன்றும் நிலவுகிறது. இது புனிதமானது, தெய் விகமானது, புலமை நிறைந்தது, புதுமைக்கும் இடங் கொடுப்பது.

தமிழ் சங்கமளவில் முதலில் பழைய மதுரையிலும், பின்னர் கபாட புரத்திலும் ஆராயப்பெற்றது. மதுரையில் முதற்சங்கமும், கபாடபுரத்தில் இடைச்சங்கம் என்னும் இரண்டாம் சங்கமும், நடைபெற்றன. அந்நகரங்கள் அழிந்தபின், இன்றைய மதுரையில் மூன்றாம் சங்கம் நடை பெற்றது. இன்று எல்லோரும் சங்கத்தமிழ் என்று வழங் குவது, அந்தச் சங்கத்தில் எழுந்த நூல்களேயாம்.

மூன்றாம் தமிழ்ச் சங்கத்திலே தான் கபிலர், பரணர், நக்கீரர் முதலாகப் பெரும் புலவர்கள் இருந்தார்கள். மதுரைக்குக் கூடல் என்றும் ஒரு பெயர். அது புலவர்கள் கூடிய இடமாதலால் கூடல் என வழங்குவதாயிற்று. "கூடலில் ஆய்ந்த ஒண்டீந்தமிழ்" என்பது மாணிக்க வாசகசுவாமிகள் திருவாக்கு.

கடைச்சங்கம் என்னும் மூன்றாம் சங்கம் நிலவிய தற்குப் போதிய அகச்சான்றுகளும், புறச்சான்றுகளும் உள்ளன. சங்கத்தாரையும் சங்கத்தையும் வெளிநாட்டு மக்களும் நன்கறிந்திருந்தனர். தமிழறியாமல் வாழ்ந்த வடபுலத்தாரும் சங்கத்தை அறிந்திருந்தனர். ஆதிகாவி யமாய வான்மீகி இராமாயணத்திலேயும் மதுரைத்தமிழ்ச் சங்கத்தின் சிறப்புக் கூறப்பெறுகிறது. தமிழின் இனிமை கூறப்பெறுகிறது.

கடைச் சங்கத்திலேயே பெரும் புலவர் பூதன் தேவனார் அங்கு சென்று கவியரங்கேறி இலங்கையும் தமிழ் கூறும் உலகம் என நிலைநாட்டியுள்ளார். அன்று அவர் உயர்த்திய கொடி இன்று வரை பறக்கிறது. தமிழ் நாட்டுக்கு அடுத்தாற் போல் இலங்கை தமிழுலகமாக நிரையில் நிலவுகிறது.

இன்று மலேசியா, சிங்கப்பூர், தென்னாபிரிக்கா, பிஜி தீவுகள், மொறீசியஸ் முதலான நாடுகளில் தமிழ் நிலவு கிறது. இவற்றைவிட முப்பதுக்கும் அதிகமான நாடுகளில் ஐம்பதுக்கும் அதிகமான பல்கலைக்கழகங்களில் தமிழ் ஆராயப்பெறுகிறது.

எங்கள் நாட்டில் இளம் பேராசிரியர்கள் பலர், ஐரோப்பிய நாடுகளில் தமிழாராய்ச்சி செய்து கலாநிதிப் பட்டம் பெற்று மீண்டார்கள் என்றால், அங்கெல்லாம் படிக்கவும், ஆராயவும், நெறிப்படுத்தவும் பெரியவர்கள், பிறநாட்டவர் உதவியாயிருந்தார்கள் என்பது வெளிப் படையாகும்.

வடவேங்கடம் தென்குமரியாயிடை தமிழ் வரம்பு வகுத்தவர்கள் போயகல, இன்று எல்லையற்ற உலகமெல் லாம் தேமதுரத் தமிழோசை ஒலிக்கும் வகை கண்ட வர்கள் வாழ்கின்றார்கள்.

இற்றைக்கு முப்பத்தாறு ஆண்டுகளுக்கு முன் பெரு மளவில் தமிழுக்கு விழாவெடுக்க முனைந்தோர் திருவாரூர், சென்னை, சேலம், மதுரை முதலிய நகரங்களில் கொண் டாடிய பின் யாழ்ப்பாணத்திலும் கொண்டாடினர். அக் காலத்து நடைமுறையில் நிகழ்ந்த விழாக்களுள், யாழ்ப் பாணத்து விழாவே மிகவும் சிறப்பாக நடைபெற்ற விழா எனக் குறிப்பிட்ட தமிழ்நாட்டறிஞர்கள், ஆராமை யோடு சொன்ன அருமையான கருத்து, இன்றும் காதில் ஒலிக்கிறது. "தமிழ்விழா திருவாரூரிற் பிறந்து மதுரை, சென்னை, சேலம் முதலாய இடங்களில் உடம்பு புரட்டி தவழ்ந்து, எழுந்து யாழ்ப்பாணத்தில் தான் நடந்தது." இங்ஙனம் விழா நடந்தது என்றமையால் யாழ்ப்பாணத் தானின் தமிழார்வம் சொல்லுந்தரத்தது என்பது பெற்றாம்.

இன்னும் என்ன சொல்ல இருக்கிறது என்று நம்பி, நங்கையர் கேட்கிறீர்கள்? கெட்டி, கெட்டி. கேளுங்கள், கேளுங்கள். இற்றைக்கு முப்பத்தைந்து ஆண்டுகளுக்கு முன் இந்தோ ஏசியன் கல்சர் என்னும் சஞ்சிகையைப் பாரத நாடு பதித்தது. அதற்கு முன்னரே யாழ்ப்பாணத்துத் தமிழன் தமிழ் கல்சர் என்னும் சஞ்சிகையை மூனை

கொள்ளச் செய்தான். உலகத் தமிழாராய்ச்சிக்கு வித்திட்டான். அது மலேசியா, பிரான்ஸ் முதலான நாடுகளிலும் முளைத்தது. இனி மோறிசியஸ் நாட்டிலும் முளைக்கப் போகிறது.

தமிழே! தாயே! நீ வாழ்க என்று சென்ற இதழில் அறுபது முறை வாழ்த்தினேம் கேட்டீர்களா?

## அழுத கண்ணீர் ஆறுகப் பெருகிற்று

இத்தாலி நாட்டிலிருந்து தம் சமயம் பரப்ப வந்த பாதிரியார் தமிழில் நனைந்து ஊறித் தமிழ்ப் புலவராகி விட்டார். அவர் தமிழுக்கு ஆற்றிய தொண்டு மிகப் பெரியது. அவற்றை விரிக்கிற் பெருகும்.

அவர் ஆற்றேட்டம் போல அருமையாகவும் ஆழமாகவும் அமைவாகவும் பாடிய ஒரு சிறிய அகவல், கபிலரகவல் என வழங்குகிறது. கபிலரோ என்றுல் ஆரிய அரசன் பிரகத்தன் என்பானைத் தமிழ்ப் பித்தனுக்கிய பெரும் புலவர்.

கபிலரகவலில் கூற்றுவன் செயல் கூறப்படுகிறது. தருமன் என்றும் நடுவன் என்றும் வழங்கும் அவன் இயம தருமராசன்தான். அவன் எப்போதாயினும் வருவான். அப்போதந்தக் கூற்றுவன் தன்னைப் போற்றவும் போகான் பொருளொடும் போகான். மூத்தோர் என்னுன் இளையோர் என்னுன். அவன் வந்து போனதால் உண்டான வெற்றிடங்களை நிரப்புவதற்கு எவராலும் முடியாது. போனவர்கள் போனவர்கள்தாம்.

அந்தப் பெருமைக்குரியவர்களைப் படைத்த பிரமதேவன் தான் உபயோகித்த அந்த அதிரிகை என்னும் அச்சினை எங்கேயோ கைதவற விட்டுவிட்டானும். தன்னுல் இனிமேல் அந்த அமரர்களைப் போன்ற தீரர்களைப் படைக்க முடியாதாம். இதையிட்டு நாம் அழுதுதான் பயன் என்ன?

## கனகராயன் குளம்

பரமேஸ்வராக் கல்லூரியில் உபஅதிபராயும், இந்துக் கல்லூரியில் அதிபராயும் பிரகாசித்தவர் விஜயம் ஆசைப்பிள்ளை. லண்டனிற் பயின்று B. Sc. பொறியியலாளராக மீண்டவர், பௌதிகம், கணிதம் கற்பித்தலில் சிறந்து விளங்கினுர். அண்ணன் சுந்தரம் ஆசைப்பிள்ளை B. A. படித்தவர். ஆங்கில விரிவுரையாளராயிருந்து ஓய்வு பெற்று வாழ்பவர்.

இவர்களின் தந்தையார் முத்தையா ஆசைப்பிள்ளை ஆனைப்பந்திச் சந்தியிலுள்ள மாடிவீட்டில் வாழ்ந்து யாழ்ப்பாண உள்ளூராட்சி மன்றத்தில் பிரகாசித்தவர். இவருடைய அப்பா சுயம்புநாதர் ஆசைப்பிள்ளை. யாழ்ப்பாணத்திலிருந்து அநுராதபுரம் வரை குதிரைக்கோச் சேவை நடத்தியவர். ஒரு சமயம் ஆள்பதி யாழ்ப்பாணம் வந்தபோது, இடையில் பந்தர் அமைத்து வெண்மலர் பரப்பி இளைப்பாறச் செய்தவர். ''உங்களுக்கு நான் செய்யக் கூடியது என்ன?'' என்று ஆள்பதி கேட்டதும் ''எங்கள் மக்கள் குடியேறுவதற்குக் கனகராயன் குளத்தைப் புனரமைப்புச் செய்து தாருங்கள்'' என்று விண்ணப்பித்து விரைவில் குடியேற்றம் கண்டவர். கனகராயன் குளத்தில் ஆசைப்பிள்ளைக்கு ஒரு நினைவுக்கல் மாத்திரம் அமைந்தாற் போதும்.

## ஒல்லாந்தர் பழமொழிகள்

1. தினமும் விருந்துக்கு வருபவர் ஒருவர் அடுப்படிக் கள்ளர்
2. பொருளில்லாதவன் பாய் இல்லாத கப்பல் போன்றவன்
3. எலியினுலும் ஒரு கப்பல் கவிழலாம்
4. ஆலோசனை கூறுபவர்கள் வள்ளல்களல்லர்
5. இராசாவோடு போகிறவர்கள் எல்லோரும் இளவரசர்கள் அல்லர்
6. பல்லைக் காட்டுபவர் எல்லோரும் கடிக்கமாட்டார்கள்
7. புத்தகங்களையும் பெண்களையும் அடிக்கடி கவனித்தல் வேண்டும்
8. விழுந்தெழுவதால் கவனமாகப் போகப் பழகுவர்
9. இருளும் இரவும் சிந்தனைக்குத் தாயர்
10. நல்லதையே செய். திரும்பிப் பாராதே
11. சமைத்ததை உண். உண்மையைப் பேசு
12. தன்னைத் தான் கவனித்தால் ஒருவரும் தவருர்.
13. கள்ளன் வீட்டில் களவெடுத்தல் கடினம்
14. ஒருகை மற்றக் கையைக் கழுவுவதால் இரண்டு கைகளும் தூய்மையடையும்.
15. முட்டாள்கள் பாண் தின்னுவிட்டால் பாண் மலியும்
16. கடவுள் நோயை நீக்க வைத்தியன் பணம் பெறுகிருர்
17. நண்பர்களே கிட்டிய உறவினர்கள்
18. மடையர் வீடு கட்டினுல் புத்திசாலிகள் வாங்குவார்கள்

## சாணக்கியன் தருமம்

1. தருமசாசனத்தை மாசுபடுத்தியவருக்கு மனச்சாந்தி கிடையாது
2. கடவுளின் நியதியை எவரும் ஏன் என்று கேட்டலாகாது
3. பெரியவர்கள் அகதிகளின் துயரைத் தம் துயரமாகக்கருதுவர்
4. மனத்தில் ஒன்றை வைத்து வெளியில் ஒன்றைப் பேசுபவர் இழிந்தவர்
5. விவேகமில்லாதவர் பிசாசுகளின் வேறுனவரல்லர்
6. எஜமானனை ஏவலாள்கள் புகழ்தல் வேண்டும்
7. விவேகிகளுக்கு பகைவர் கிடையார்
8. வர்த்தகத்தில் தர்மம் நிலைபெறல் வேண்டும்

### தீவினைப் பயன்

பாலப் பருவத்தில் தாயை இழத்தல்
காளைப் பருவத்தில் மனைவியை இழத்தல்
முதுமைப் பருவத்தில் புதல்வரை இழத்தல்

★ உள்ளத்தில் ஞானம் இருந்தால் தீயவை புகா ★

# அப்பு எங்குற்றார்?

உலகத்திற்கு கருத்தாவும், சர்வசிவ தயாபரனுமாய சிவபெருமானே அப்பர். அவருடைய சகல வல்லமையுடைய ஆற்றல் என்னும் சக்தியே அம்மை. அம்மை அப்பரே இவ்வுலகுக்கெல்லாம் அம்மையப்பர். அந்தவழியில் அப்பராய் அன்புநெறி காட்டி அறம் செய்த முனிவர்கள் ஞானியர் பலர் எங்கள் மத்தியில் அப்பர்.

அப்பர் என்றதும் தேசபிதாவாய திருநாவுக்கரசு நாயனாரையே எவரும் கருதுவர். அவர் வழியில் தொண்டு புரிந்து தயாமூல தத்துவத்தைக் கண்டு சார்ந்தோர்களை வாழவைத்து உய்தி அடையச் செய்தவர்கள் பலர்.

திருநெல்வேலியில் ஆடியபாத வீதியில் அறுபது ஆண்டுகளுக்கு முன் ஒரு அப்பர். அவரே டாக்டர் சபாபதிப்பிள்ளை. அவரைத் தோட்ட அப்பு என்று வழங்கினர். அவர் ஊரிலுள்ளவர்களுக்கு மருந்துதவி செய்ததோடு வாழ்வுக்கும் வசதி செய்தவர். தமது மாடிவீட்டில் ஆதரவற்ற பிள்ளைகளை வளர்த்து வந்தவர்.

அன்று 1928 ஆம் ஆண்டின் விஜயதசமி நாளில் திருநெல்வேலியில் இரட்டைப்பிள்ளைகள். ஒன்று சைவாசிரியகலாசாலை. மற்றது அன்புச்சோலை. இரண்டு பிள்ளைகளையும் வளர்த்தவர் இந்து போர்ட் இராசரத்தினம்.

இராசரத்தினம் அப்புவாகி ஆயிரவர்களின் அன்புத் தெய்வம். ஒரு பிள்ளைக்கு உணவு இல்லை என்றால் துடியாய்த்துடித்து உடன் ஒழுங்கு செய்தவர். அவர் அப்பர் வழியில் புரட்சியில்லாமல் சர்வோதயம் கண்டவர். வசதியில்லாத பிள்ளைகள், மாற்றுடையில்லாத பிள்ளைகள், எலும்பும் தோலுமாய் வந்தடைந்தவர்களும் இருந்தார்கள். அவர்கள் அன்புச்சோலையில் உடம்பை வளர்த்து உயிரை வளர்த்து உய்திபெற்று உத்தியோகமும் ஏற்றவர்கள். எல்லாம் ஆதரவற்றவர்களுக்கு அன்னம்பாலித்த இராசரத்தினம் செய்த தொண்டு.

அன்புச் சோலையில் ஆதரவுகண்ட ஆயிரவர்களுள் கதிரைவேலு என்றொரு விவேகி இருந்தார். ஆரம்பக்கல்வி பயின்ற காலத்திலேயே கெட்டிக்காரனாயிருந்து சைவாசிரியகலாசாலைக்குட் புகுந்து பயிற்றப்பெற்ற நல்லாசிரியனானவர். இரவில் நெடுநேரம் அமைதியாயிருந்து போத்தல் விளக்கில் படித்தவர்.

தான் ஆதரவு பெற்று ஆளான வகையில் தானும் ஆயிரவரை உய்தி அடையச் செய்தல் வேண்டும் என்று திட்டமிட்டுச் செயலாற்றினார். வற்றி வரண்ட கிளிநொச்சிக்காட்டுப் பகுதியில் ஐம்பது ஏக்கர் நிலத்தை நாடாக்கினார். நகராக்கினார். மனித சஞ்சாரம் உண்டாக்கினார்.

அப்புவின் குருகுலத்தின் அருமையை நேரிற் கண்டு பாடிய சுத்தானந்த பாரதியார் பரவசமுற்றார்.

"பச்சைத் திருவளர் சோலை
பரமன் குருகுல சாலை
உச்சக்கலை தரு நிலையம்
உழைப்பால் வளம் பெறவிளையும்."

இனிப் பக்கத்தில் மகாதேவ சுவாமிகள் திருநாமத்தால் ஆச்சிரமம் அமைத்துப் பணிபுரியும் தவராசர் வடிவேற்சுவாமிகள் இந்தக் குருகுலம் ஒரு கற்பக விருட்சம் என்றும் நல்லொளி காட்டுவதென்றும் போற்றியுள்ளார்.

குருகுலம் பாரம்பரியமாக வந்த தியாகபீடம். சத்தியம், அகிம்சை, எளிமை இதன் அடியூற்று உடலுழைப்பு, தன்னம்பிக்கை, சுயதேவைப் பூர்த்தி காண்பது இது. குன்றக்குடியடிகளார், ஆசாதேவி அரியநாயகம் முதலானோரும் பாராட்டிய குருகுலம்.

அன்று சுவீடின் நாட்டிலிருந்து வந்த தீப்பெட்டி மூன்று சதம். உறுதியான குச்சிகள். அது நிற்க கதிரைவேலர் ஆசிரியப்பயிற்சி பெற்ற காலம். நடுச்சாமத்தில் விடுதிச்சாலையில் மண்ணெண்ணெய் விளக்கு மின்மினி போல ஒளி வீசியது. மேற்பார்வையாளர் வெளிச்சத்தை நோக்கி நடந்தார். ஆளரவம் கேட்ட கதிரைவேலர் விளக்கை அணைத்தால், மீளக்கொளுத்தக் குச்சி இல்லையெனக்கண்டு ஒரு நார்க்கடகத்தை எடுத்து விளக்கை மூடி மறைத்தார். விடுதி மேற்பார்வையாளர் இருளில் என்ன செய்வதென்று தெரியாமல், வெற்றிகரமாகப் பின் வாங்கிவிட்டார். சில நிமிட நேரஞ்செல்லக் கதிரைவேலர் தொடர்ந்து படித்தார். ஏழைக்கே ஏழைகளின் துயரம் தெரியும். ஏழைகளின் துயரத்தைத் துடைத்த கதிரைவேலர் அன்புத் தெய்வம்.

அப்பு நல்லாசிரியர், நாடறிந்த தலைமையாசிரியர். காடறிந்த கமக்காரன். உலகம் அறிந்த உத்தமர். கிளிநொச்சியில் கரடிப்போக்கு வழியாகப் போனால் வரும் உபத்திரவபுரத்தை உருத்திரபுரமாக்குவதற்கும் அப்பு உதவினார். காய்கறித் தோட்டம் செய்வதும், நந்தவனம் செய்வதும் பொழுது போக்கு. வயற்செய்கை சிவனோபாயம். பென்னம் பெரிய வயலுக்கு வாய்க்கால் வழியோடும் நீர் போதாதென்று பாரியகிணறுகள் தோண்டினார். வயிற்றுச் சோற்றுக்காகச் சொந்த சமயத்தை விட்டுப் பிள்ளைகள் மாறுவது ஆகாதெனக் கண்டு, விடுதியிலேயே வழிபாட்டு மண்டபம், ஆராதனைக் கோயில் எல்லாம் சமைத்தார்.

அவரின் சர்வசக்திபீடம் மேருபீடம் ஹாவாய் சுப்பிரமணிய முனி அவர்களையும் கவர்ந்தது. முன்னர் சங்கராசாரியர் சண்மதத் தாபனம் செய்த வகையில் இவர் சமைத்த பீடத்தில் ஸ்ரீ சர்வவல்லகாம்பிகாசமேத பரிபூரணானந்தர், சித்திவிநாயகர், வள்ளி தேவயானை சமேத சுப்பிரமணியர், வைரவர் முதலான மூர்த்தங்களைப் பிரதிட்டைசெய்து, சர்வசதாசிவ மூர்த்தமாய சிவலிங்கத் தாபனமும் அருமையாகச் செய்துள்ளார். சிவலிங்கப் பெருமானை எல்லோரும் தீண்டி அபிஷேகம் செய்யும் முறையையும் அமைத்துள்ளார்.

தாமும் குடும்பமுமாக ஆறு லட்சம் ரூபா பெறுமதியானவற்றைக் குருகுல வளர்ச்சிக்குக் கொடுத்தமை ஒரு அன்புக்கொடை, அறக்கொடை. அதனால் அவரே அப்பு, அவர் மனைவியே அம்மை. அம்மையப்பரே உலகுக்கு அம்மையப்பர் என்றாற்போல இவர்களும் அம்மையப்பராவர்.

**Milk White Products are successful choise Everywhere.**

## பழஞ்சலிப்பு

ச. து. சுப்பிரமணியயோகி

அன்று சுந்தரமூர்த்திநாயனுர் ஒரு பழஞ்சலிப்பைக் கேட்டு மனம் பதைத்துப் பக்தியோடு இறைவனைப்பாடி முதலை வாயிலிருந்து குழந்தையை மீட்டார். இன்று இறந்தவரை மீட்பாரின்றி ஏங்கும் நெஞ்சங்கள் பல. அருமைக் குழந்தை, அழகான பெண் குழந்தை, தங்கப்பதுமையென தளர்நடை பயின்றதுவாம். அம்மா, அப்பா என்று அன்பொழுக அழைத்ததுவாம். அதனை இழந்த தந்தை தானும் ஒரு தமிழ்ப்புலவன்.

சின்னஞ் சிறு குழந்தை
சிங்காரப் பெண் சிறுமி
என்நெஞ்சு அமு தூற்றும்
இனிமை எங்குப் போனதுவோ?

மாம் பழத்தின் மேனி
மதி உறிஞ்சும் வட்டமுகம்
பூம் பருத்தி ஆடை
புனையாத தோகை மயில்.

ஆசை எல்லாம் ஓர் உருவாய்
ஆர்வம் எல்லாம் ஓர்கனியாய்
பேசரிய காதல்
பிழம்போர் மதுக் கடலாய்.

சோதி உயிர் பாய்ந்து
துள்ளும் சிறிய உடல்
மோதும் இன்பமாய் வளர்ந்த
மோகச் சிறு குழந்தை

காளியம்மை எம் மேல்
கருணை கொண்டு சின்னுட்கள்
தோளில் விளையாட விட்ட
சுவையூறும் பொன்பாவை.

வானத்து ஒரு சுடர்தான்
வையகத்தைப் பார்ப்பதற்கு
மீனத் திரள் வடித்த
மின்னரசி போல் வந்தாள்.

பம்புமலைக் காட்டில்
பாயாமல் என்மனைவி
கும்பமுலைக் காட்டில்
குதித்திட்ட மான்குட்டி.

தேடக் கிடைக்காத
திரட்டுப்பால் தேவர்க்கும்
கூடக் கிடைக்காத
கூத்திட்ட பூச்செண்டு.

காலையிலே கண் விழித்து
கடும்புயலில் அகப்பட்டு
மாலையிலே வாடி
வதங்கியதோர் மலரைப்போல்.

ஆண்டு இரண்டுகூட
நிறையாத ஆயுளுடன்
மாண்டு விட்டாள் என்னுடைய
மன்னுயிராம் பெண்பாவை.

சின்னஞ் சிறுவயதுச்
சிறுபாவை என்மகளைக்
கன்னெஞ்சக் காலன்
களவு கொண்டான் ஐயையோ.

ஆழவிழியின் அலையெறியும்
பார்வை தனைப்
பீழையுடைய பிணநோக்காய்ச்
செய்து விட்டான்.

அப்பா! அப்பா என்றும்
அம்மா அம்மா என்றும்
இப்பாரில் எம்மை இனி
யாரழைக்கப் போகின்றுர்?

பட்டிட்டுப் பொட்டிட்டுப்
பள்ளிக்கு உனையனுப்பத்
திட்டமிட்ட தெல்லாம்
திசைமாறிப் போச்சுதடி!

காட்டா தனவெல்லாம்
காட்டி எமைப் பிரிந்தாய்!
மீட்டும் எங்கள் வீட்டில்
விளையாட வாராயோ?

## மக்களைச் சான்றோராக்காத தந்தை

ஈன்று புறந்தருதல் தாயின் கடமை, குழந்தையைச் சான்றோனுக்குதல் தந்தைக்குக் கடன். தன் பிள்ளையைச் சான்றோன் என ஊரவர், நாட்டவர் கூறக்கேட்ட தாய் அவனை ஈன்றபொழுதிற் பெருமளவில் உவப்பள். அமெரிக்க நிபுணர் காள்குப்பர் என்பவர், பாரதத்தில் வரும் துரியோதனுதியோர் சான்றோரா யிராமைக்குக் காரணம் தந்தை திருதராட்டினனுக்குக் கண்தெரியாமையேயாக லாம் என்று உலகுக்கு எடுத்து விளக்கியுள்ளார்.

**MILKWHITE**

Makes many products.
But only the best of each.

## தன்னை அலங்கோலஞ் செய்துகொண்ட அழகி

ஆண்மைமிக்க நம்பியும், அழகுமிக்க நங்கையும் அன்பு ஆதரவோடு இல்லறம் நடத்திவந்தகாலத்தில், அவன் பொருள்தேடுவதற்குப் பிறநாடுசென்றுன். அவன் போனபின் அடுத்தவீட்டுக்காரன் அடிக்கடி தலைகாட்டிக் கெட்டகுறிப்புத் தெரிவித்துவந்தான். இதை மனங் கொள்ளாத அந்த உத்தமி, ''இவன் எனது அழகைக் கண்டுதானே விசர்க்கூத்து ஆடுகிறுன், பார்ப்போம்'' என்று கருதி, தன்னை அலங்கரித்தலை நீத்து, கரிமுதலியன பூசித் தன்னை அலங்கோலஞ் செய்திருந்தாள். அதன்பின் அடுத்தவீட்டுக்காரன் அந்த அவலட்சணத்தைத் திரும்பியும் பாராதிருந்தான். இவ்வாருகப் பொருள்தேடப் போனவன் மீண்டுவந்தபின் அந்த அழகி கணவனிடம் நடந்ததைக் கூறிப் பழையபடி அழகியாய் மகிழ்ந்திருந்தாள்.

★ நல்ல ஆரம்பம் பாதி வெற்றி என்பது பழமொழி ★

## எங்கள் பறவைகள்

பறவைகள் யாவும் முட்டையிடுவன. பறவையாயிருந்தும் முட்டையிடாத ஒரு பிராணி வௌவால். பறவைகள் பறப்பதைப் பார்த்தே மனிதன் தானும் வானத்தில் பறக்க முயன்று இன்று விமானத்தைக் கண்டுள்ளான். பறவைகள் நமக்கு முன்னதாகவே நித்திரை விட்டெழுந்து இரைதேட ஆரம்பிக்கின்றன. பறவைகள் பெரும்பாலும் சுறுசுறுப்புள்ளனவாக உள்ளன. பெரும்பாலான பறவைகள் கூட்டமாகவே வாழ்கின்றன.

எங்கள் காகம் இனப்பற்றுள்ள பறவை. அது தன் இனத்தவரை அழைத்து உணவு கிடைக்கும் இடத்தைக் காண்பிக்கவல்லது. ஒரு காகம் இறந்தால் நூற்றுக்கணக்கான காகங்கள் கூடி இரங்கிக் கரையும்.

புளினி என்னும் பறவை பெரும்பாலும் கூட்டமாகவே தத்திப் பறந்து திரிந்து இரைதேடும். அக்கூட்டத்தில் ஏழு பறவைகள் கூடியிருப்பதால் ஏழு சகோதரிகள் எனவும் அவை பெயர் பெறும். புறுவும் கூட்டங் கூட்டமாகவே வாழுகின்றன. அவை மாடப்புறு, மணிப்புறு சாம்பற்புறு என்னும் பல பிரிவுகளிலடங்கும். அவை ஆலம்பழம், அத்திப்பழம் தின்பதில் விருப்பம் உள்ளவை. புறுக்கள் அழகானவை. ஆனால் அவற்றின் சத்தம் இனிமையாய் இருக்காது. அது மனிதர் இல்லா வீடுகளில் புகுந்து வீட்டைப் பழுதாக்கிவிடும். சிலர் பெரிய கூடுகள் அமைத்துப் புறுவை வளர்க்கிறார்கள்.

புறு வேகமாகப் பறக்கும். அது முற்காலத்தில் ஓரிடத்திலிருந்து இன்னோர் இடத்திற்குச் செய்திக் காகிதங்களை எடுத்துக் கொண்டு சென்றன.

பறவைகளை அவதானிப்பவர்கள் அவற்றின் இனங்களை அறிவதற்கும் பழகுவர். இறகுகளைக் கொண்டும், முட்டைகளைக் கொண்டும், அவை கட்டும் கூடுகளைக் கொண்டும் அவை இன்ன பறவைகள் எனக் கூறுவர். சில பறவைகள் ஒரே முறையில் இரு முட்டைகள் இடுகின்றன. சில பறவைகள் பெருமளவில் இடுகின்றன. சில பறவைகளுக்கு அடைகாக்கத் தெரியாது. சில பறவைகள் கூடு கட்டுவதில்லை.

எங்கள் நாட்டுப் பறவைகளுள் கோழி, காட்டுக்கோழி, சம்புக்கோழி, காகம், அண்டங்காகம், குயில், வரிக்குயில், பேய்க்குயில், கொண்டைக் குயில், குக்குறுப்பாச்சி, மீன்கொத்தி, சாவற்குருவி, காணன்காலி, பாம்புக் குருவி, காட்டுப்புளினி, கோட்டான், கடற்குருவி, மலைக் கோட்டான், ஆள்காட்டி, பொன்குருவி முதலாகவுள்ளன ஒருசில.

நீண்ட சொண்டுள்ள பறவைகளுள் நாரை, மலைக் கோட்டான், சாவற்குருவி மீன்கொத்தி, இரட்டைச் சொண்டன், கோட்டான் முதலியன ஒருசில.

வளைந்த சொண்டுள்ள பறவைகளுள் காகம், கோழி, புளினி, குயில், கிளி, நாக்கழும் பட்சி, வல்லூறு என்பன ஒருசில.

சில பறவைகளின் சொண்டு உறுதியானவை. அவை தமது உணவைக் கொத்திக் கிழித்துச் சிதைத்து உண்பதற்குச் சொண்டுகள் உதவுகின்றன.

சில பறவைகள் இரவில் மாத்திரம் இரை தேடுகின்றன. அவற்றுக்கு உதவியாகப் பெரிய உருண்டைக்கண்கள் உள்ளன. ஆந்தையின் கண்கள் பெரியவை. இரவில் இரைதேடும் பறவைகள் சத்தமிடாமல் பறப்பன. அவற்றுக்கு உதவியாக மெல்லிய இறகுகள் உள்ளன. ஆந்தை மரப்பொந்துகளில் வாழும் இயல்புள்ளன.

பருந்து மிகவுயரத்தில் பறக்கும். ஆனால் அது நிலத்தில் உள்ள சிறிய தவளையையும் மேலிருந்து பார்த்து உடனே இறங்கித் தாவித் தூக்கிச் செல்லும். அதன் கண் கூர்மையான பார்வை உள்ளது. அது பாம்பைக் கண்டால் கொத்திக் கிழித்துவிடும். அது உயர்ந்த மரங்களிலும் மலைகளிலும் கூடு கட்டும்.

நீரிலும் நீர்க்கரையிலும் வாழும் பறவைகளுள் வாத்து ஓரினம். வாத்தில் பலவகையுண்டு. அவை நன்றாக நீந்தும். அவற்றின் இறகுகள் அதிகம். அவை வாத்தைக் குளிர் சூடு தாக்காமல் காக்கும். வாத்தின் இறகுகளில் நீர் ஒட்டுவதில்லை. வாத்தின் காலடியில் சவ்வு அது நீந்துவதற்கு உதவியாயிருக்கும்.

## நினைவிற் கொள்ளத்தக்கவை

| | |
|---|---|
| சிவத்தின் அருவுருவம் | — சிவலிங்கம் |
| திருவருள் வடிவாய் வருபவர் | — குரு |
| சிவனடியார் திருக்கூட்டம் | — சங்கமம் |
| மலத்துடன் நிற்கும் உயிர் | — பெத்தான்மா |
| சிவத்துடன் நிற்கும் உயிர் | — முத்தான்மா |
| விருப்பு வெறுப்பு இல்லாமை | — இருவினையொப்பு |
| ஆணவமலம் வலிகெடுதல் | — மலபரிபாகம் |
| ஆன்மாவின் திருவருள் பதிதல் | — சத்திநிபாதம் |
| சஞ்சிதவினை தீரும் வழி | — தீட்சை |
| ஆகாமியம் தீரும் வழி | — திருவருள் |
| பிராரத்தம் தீரும் வழி | — அநுபவம் |
| இறைவனின் குணம் | — கருணை |
| உயிருக்கு அறிவைத் தருவது | — திருவருள் |
| உபநிடதங்கள் கூறுவது | — வேதாந்தம் |
| திருவருட் பேற்றின் அறிகுறி | — உருத்திராக்கம் |
| இறைவனின்உருவத்திருமேனி | — மகேஸ்வரன் |
| இறைவனின்அருவுருவத்திருமேனி | — சதாசிவன் |
| மகேஸ்வரனின் சக்தி | — மகேஸ்வரி |
| சதாசிவனின் சக்தி | — மனோன்மணி |
| சிவாலயத்தில் தொண்டு செய்தல் | — சரியை |
| சிவனை அகத்தும் புறத்தும் பூசித்தல் | — கிரியை |
| சிவத்தை மறவாது தியானித்தல் | — யோகம் |
| சிவஞானமுணர்ந்து நிட்டை கூடல் | — ஞானம் |
| சிவத்தோடு ஆன்மா கொள்ளும் தொடர்பு | — அத்துவிதம் |
| சிவத்தைக் காட்டும் சிறந்த அடையாளம் | — சிவலிங்கம் |

★ மனிதன் கடவுளுக்கு ஏற்றவனாய் வாழ்தல் வேண்டும் ★

## இப்படிச் சொன்னார்கள்

1. அலங்கார அணிகலங்கள் சிறுமையின் சின்னம்
2. அணங்குகளின் உண்மையான அணிகலன் அறப்பண்பு
3. ஆசை முடியும் இடத்தில் அமைதி பிறக்கும்
4. அழகு என்பது இதயத்தின் ஒளியேயாகும்
5. ஒழுக்கம் இல்லா அழகு மணமில்லாமலர்
6. அழகு ஆண்டவனின் அருட்கொடை
7. அழகை உண்டாக்க முடியாது அது தானாய் [அமைவது
8. கற்பின் மலரே அழகு
9. அவசியமற்றதை அகற்றுவதே அழகு
10. உண்மையான அழகு இதயத்தூய்மையில் உள்ளது
11. கற்பழியா ஆற்றல் கடல்சூழ் உலகில் அற்புதமானது
12. கற்பு உடன் பிறப்பு. அதுவே கவசம்
13. மகளிர் நிறைகாக்கும் காப்பே தலை
14. மாதரார் அன்பின் நின்றன அறங்கள்
15. என் கற்பு எங்கள் குலமுத்து
16. கற்புக்குப் பக்கபலம் எதுவுமே தேவையில்லை

1. லேவேட்டர் 2. ஜஸ்ரின் 3 எட்வேட்யங் 4. காளில் கிப்ரான் 5. பிரெஞ்சுபழமொழி 6. அரிஸ்ரோட்டில் 7. எமிலிடிக்கின்சன் 8. சினோ 9. மைக்கலாஞ்சலோ 10 காந்தியடிகள் 11. ஔவை 12. மில்ரன் 13. திருவள்ளுவர் 14. கம்பர் 15. சேக்ஸ்பியர் 16. பிலிப்சிட்னி

## கேத்தே ஞானி

1. ஆற்றல் தனிமையில் உண்டாவது
2. நாங்கள் வஞ்சிக்கப்படுவதில்லை. நாங்களே வஞ்சிக்கிறோம்.
3. எவரொருவரும் மற்றவர் ஒருவருக்குக் கடமைப் படாமல் இருப்பதில்லை
4. அதிகமாக அறிவு பெருகும்போது, ஐயம் அதிகரிக்கிறது
5. அரைப்படிப்புக்காரனிலும், அரைவிசரனிலும் ஆபத்து உண்டு
6. அரசனாயிலும், அன்றாடு உழைப்பவனாயிலும் வீட்டில் அமைதி கண்டால் மகிழ்ச்சி கண்டவனாவன்
7. எங்கள் அழியாத்தன்மையின் பாலப்பருவமே எங்கள் முழுவாழ்வும்.
8. ஒருவர் சொல்வது இன்னொருவர் சொல்வது வேறாயிருப்பனவாதலால், இருவர் சொல்வதையும் கேட்போமாக.
9. இளமையில் மரணம் உபயோகமற்ற வாழ்வு
10. தற்காலத்து எழுத்தாளர் மையில் அதிக நீர் கலக்கிறார்கள்
11. விஞ்ஞானம், கலை உலகம் முழுவதற்கும் சொந்தமாகவே, அவற்றால் தேசியம் என்னும் எல்லை அழிகிறது
12. ஞானம் என்பது உண்மையின் உற்பத்தி

## குற்றாலம், கொடைக்கானல், நுவரெலியா

கோடைகாலத்தில் ஒதுங்கி வாழ்வதற்கு வசதியுள்ளவர்கள் ஓய்வெடுக்கும் இடங்கள் பல. மில்க்வைற் தொழிலதிபர் கிளிநொச்சி சென்று உருத்திரபுரத்தில் அப்பு கதிரவேலு அவர்களின் ஆச்சிரமத்தில் தங்குவது வழக்கம். இங்கே தொழிலதிபரின் உதவிக்கரம் நீண்டதும் உண்டு. அது ஆழத்துக்குச் சென்று வசதியான கிணறு தோண்டிக் கட்டிக்கொடுத்ததும் உண்டு. ஒரு நாள் பிள்ளைகள் பலர் நீர் பற்றுக்குறைகண்டு தயங்கியதைப் பார்த்த தொழிலதிபர், அடுத்தவாரமேகிணறு வெட்ட ஒழுங்குசெய்தார். அது வற்றுத ஊற்றுவள முள்ள கிணறு. குருகுலத்துச் சூழலைப் பசுமைசெய்து கொடுப்பது.

## திருமதி முத்துலட்சுமி ரெட்டி

இங்கிலாந்தில் பெண்கள் வாக்குரிமைக்காகக் கிளர்ச்சிசெய்தபோது, இந்தியாவில் காந்தியடிகளிடம் உரையாடிக் கிளர்ச்சிசெய்து பெண்ணுரிமைக்குப் பாடு பட்டவர் இவர். நடனக்கலையை விலைகூறி விற்ற பெண்கள் சிலர் தங்களையும் விற்ற காலத்தில் துணிந்து நின்று திருத்தியவர் இவர். இந்தியாவில் டாக்டரான முதல் பெண் இவரேதான். இவரின் தந்தையார் நாராயணசாமி தன்மகளை முன்னேற்றத் துறையில் முன்னோடியாக்கிவந்தார்

## தமிழ்ப் பெண் பொலிசுக்காரர்


தமிழ்நாட்டில் நூற்றுக்கணக்கான பெண்கள் கொன்ஸ்ரபிள் வேலைபார்க்கிறார்கள். சிலர் இன்ஸ்பெக்ரர்களாகவும் பதவியுயர்ந்து தரமான பணிபுரிகிறார்கள். இதமாகப் பேசிப் பெரிய சிக்கல்களை நல்ல அணுகுமுறையில் சீராக்குகிறார்கள். பஸ்வண்டியில் சிறுவர் சிறுமியர் பாடசாலைக்குப் போகும்போது ''சிரத்தைக் கரத்தை வெளியே நீட்டாதீர்கள்'' என்று சிரித்துச் சிரித்துச் சொல்லுகிறார்கள். அன்புக்கு அடிபணியவைப்பார்கள் போல நடக்கிறார்கள். அவர்களுக்கு அம்மாக்குணம் பிறப்பிலேயே இருக்கிறதுதானே.

## குடங்கை கட்டி அளத்தல்

பண்டைத் தமிழர் மருதநிலவாழ்வின் பண்பாட்டொழுக்கம் வயலில் விளைந்த நெல்லில் ஒருபகுதி கோயிலுக்குக் கொடுப்பதாகும். பொலி பொலியெனப் பொலிந்த நெல்லை அளக்கும்போது மரக்காலின்மேல் உள்ளங்கைகள் இரண்டையும் சேர்த்து அணைத்து அதிக நெல் சேருமாறு அணைத்தலாகும். அளப்பதற்கு முனும் அளந்தபின்னும் ஒரு சிறங்கை அள்ளிக் கூட்டிக் கொடுத்தகை வேளாளரின் தாராளமான கை. அளந்து போட்ட நெல்லின் குவியலுக்கு நெல்லது குப்பைக்குப் பெயர் அம்பாரம். கோயிலுக்கு – பிள்ளையார் கோயிலுக்கு ஒதுக்கிவைக்கும் நெல்லுக்குப்பெயர் பிள்ளையாரடி.

மருதநிலவாழ்வைப் படம்பிடித்துக் காட்டியவர்களுள் கச்சியப்ப சிவாசாரியரும் ஒருவர்.

உ



# சைவப் பெரியார் கார்த்திகேசு

யாழ்ப்பாணத்தில் சைவம் வளர்த்த சான்றோர் வரிசை பெரிது. நாவலர் எனப் பெயர்பெற்றவர் வரிசையிலேயே ஆறுமுக நாவலர், சபாபதி நாவலர், அம்பலவாண நாவலர் ஆகியோர் முத்திறத்து அடியவர், அவர்கள் தமிழ்நாட்டிலேயே அதிகமாகப் பணிபுரிந்து பிரகாசித்தவர்கள்.

செந்திநாத ஐயர் அவர்கள் சைவப் பெருங் குரவர்களையே சிவாசாரியர்களையே திருப்பரங்குன்றத்துக் குடிலிலமர்ந்து குருகுலக் கல்விவளர்த்தவர். அவர் உருவாக்கியவர்களுள் ஒருவர் பழநி வேதாகம பாடசாலை முதல்வர் காசிவாசி ஈசானசிவாசாரியர், மேலைப்புலோலி கதிரைவேற்பிள்ளை, கலியாண சுந்தர முதலியார் முதலானோரை உருவாக்கியவர், மட்டுவில் வேற்பிள்ளை திருக்கைலாய பரம்பரை மடங்களின் மகாவித்துவான் ச. தண்டபாணி தேசிகர் முதலானோரை உருவாக்கியவர். தெல்லிப்பழை சிவானந்த ஐயர், கந்தமடம் சுவாமிநாத பண்டிதர், காரைநகர் அருணாசலம் உபாத்தியாயர் முதலானோர் சைவப் பெரியார்கள். இந்த வரிசையில் பூத்து மலர்ந்தவர் புலோலி சு. சிவபாதசுந்தரம் அவர்கள்.

இந்த இனத்தைச்சேர்ந்த வேலணையூர் வித்தகர் மு. மயில்வாகனம் அவர்கள், எம். எம். எனவும் சாமி மயில்வாகனம் எனவும் வழங்கியவர். இந்துக்கல்லூரியில் நீண்டகாலம் ஆசிரியராயமர்ந்து பெருமை பெற்றவர். இவர் இன்று தொண்ணூறு கண்டும் அசையாமல் பணிபுரிகின்றார்.

ஒருகாலத்தில் அகில இலங்கைச் சைவமகாநாடு என்று ஒரு சபை பெருமளவில் சமயம் வளர்த்தது. அதனை இயக்கிய மயில்வாகனம் அவர்களின் பக்கத்துணைகளில் வித்தியாலயத்து ஆசிரியர் வ. கார்த்திகேசு அவர்களும் ஒருவர். கத்திச் சத்தம்போட்டு, மூச்சுப்பிடித்து ஓய்வின்றி ஓடித்திரிந்து அலுவல் பார்த்த கார்த்திகேயருக்கு இணை எவருமில்லை. தமிழ்நாட்டிலிருந்து பென்னம் பெரிய பேச்சாளர் பிரசங்கம் வல்லோர் பலர் வந்து போனார்கள். சிவக்கவிமணி சுப்பிரமணிய முதலியார் சச்சிதானந்தம்பிள்ளை, புரிசை முருகேசு முதலியார், இராமச்சந்திரன் செட்டியார், வச்சிரவேல் முதலியார், அருணை வடிவேல் முதலியார், அ. ச. ஞானசம்பந்தன் ஆரணி முத்துமாணிக்கவாசக முதலியார், இன்றைய தர்மபுரவாதினத்து மகாசந்நிதானம் என்றித்திறத்துப் பெரியார்கள் வந்து தங்கிப் பேசிப்போனார்கள் என்றால் அவர்களை உபசரித்து அவர்களின் பணிவிடைகளைச் செய்து வழியனுப்பிய வித்தகம் விசாலமானதேயாம். அந்த வித்தகம் வித்தியாலயத்துப் பழைய ஆசிரியர் சைவப் பெரியார் கார்த்திகேசு அவர்களதேயாம்.

பெரியார்கள் யாவரும் சிவபூசை செய்வதற்கும் மகேசுரபூசை செய்வதற்கும் முட்டின்றி எடுபிடி வேலைகளை ஏற்று மனங்கோணாமல் களைக்காமல் செய்து நிறைவேற்றிய செயல்வீரன், சைவப்பெரியார் கார்த்திகேயனை விட வேறு யாவர்? மகேசுர பூசையில் நூற்றுக்கணக்கானோர் உண்ட இலைகளை எடுத்து இடத்தைச் சுத்தம்செய்தவர் அவரேதான். சைவம் வளர்த்த சபையொன்றின் உத்தியோகத்தவர் தெரிவு, சட்டத்தரணிமாரின் ஏகபோக உரிமைக்குள்ளிருந்த காலத்தில் ழகர, ளகர பேதந் தவிர்த்து அறிக்கை எழுதிக் கொடுத்தவரும் அவரேதான். அந்தக்காலத்தில் சைவமகாநாடு என்றால் மாணக்கர் மாணக்கியர் மத்தியில் பேச்சுப் போட்டி, பண்ணிசை தவறாமல் திருமுறையோதும் போட்டி கடுமையாக நிலவியது, மணியகாரன் பிரிவுகள் தோறும் மையமாக அமைய நடைபெற்ற சிக்கலான இறுதிப்போட்டியில் கார்த்திகேயரின் காய்தல், உவத்தல் இல்லாத் தீர்ப்பு பெரிய மதிப்புக்குரிய தீர்ப்பு.

சைக்கிள் வண்டியிலேயே பலமைல்தூரம் ஓடிச் சென்று வேலைபார்த்த சதுரப்பாடு பெருந்தன்மையானது. இவற்றுக்கிடையில் வண்ணை வைத்தீஸ்வரன் கோயிலில் மாலை வேளைகளில் உரத்தகுரலில் சிவபுராணம் ஓதியவரும் அவரேதான். குரலினிமை இல்லாதபோதிலும் அவரின் பக்தியைக்கண்டு பரவசமுற்ற பக்தர்கள் அவருக்குப் பெரு மதிப்புக் கொடுத்தனர். அவரைப்போன்று இன்னொருவரைக்காணமுடியாது. நீங்கள் கண்டால் தயவுசெய்து அறியத்தாருங்கள். அவருக்கு எங்கள் அஞ்சலி.

# பாரத நாட்டவரான இவர்கள் யார்?

1. மகாத்மா 2. குருதேவர் 3. குலபதி 4. இராஜாஜி 5. இரும்புமனிதன் 6. தீனபந்து 7. கல்கி 8. மாலி 9. லக்ஷ்மி 10. இளவழகன் 11. மறைமலை அடிகள் 12. சொல்லின் செல்வர் 13. சிலம்புச்செல்வர் 14. இரசிகமணி 15. சிவக்கவிமணி 16. கப்பலோட்டிய தமிழன் 17. எல்லைக்காந்தி.

1. மோகன் கரஞ்சந்திரகாந்தி 2. இரவீந்திரநாத் தாகூர் 3. கே. எம். முன்ஷி 4. சக்கரவர்த்தி இராசகோபாலாச்சாரி 5. சர்தார் வல்லபாய் பட்டேல் 6. C. F. அண்ரூஸ் 7. ரா. கிருஷ்ணமூர்த்தி 8. ஓவியக்காரர் மகாலிங்கம் 9. டாக்டர் திரிபுரசுந்தரி 10. ம. பாலசுப்பிரமணியம் 11. வேதாசலம் 12. ஆர். பி. சேதுப்பிள்ளை 13. ம. பொ. சிவஞானகிராமணி 14. சிதம்பரநாதமுதலியார் 15. சி. கே. சுப்பிரமணிய முதலியார் 16. வ. உ. சிதம்பரப்பிள்ளை 17. அப்துல் கபார்கான்.

★ செல்வத்திலே பற்றுவைத்தால் தெய்வத்தை அறிய மாட்டான் ★

## எங்கள் நாட்டவரான இவர்கள் யார்?

1. அருணி, 2. ஈழகேசரி, 3. தருக்ககோடரி 4. வித்துவசிரோமணி, 5. உரையாசிரியர், 6. தமிழ் தாதா. 7. பத்திராதிபர். 8. பாரதியார். 9. சாஸ்திரிகள். 10. ஆசுகவி. 11. இரசிகமணி 12. பண்டிமதணி. 13. சொற்கலைப்புலவர். 14. குரு கவி. 15. கலைப்புலவர். 16. கலையரசு. 17. இள முருகனுர். 18. லோகு. 19. மாயாவாததும்ச கோளரி. 20. விபுலானந்தர். 21. பட்டதாரிப்பையன்

1. சேர் பொன்னம்பலம் அருணுசலம் 2. சேர். இராமநாதன். 3. தம்பு என்னும திருஞானசம்பந்தர். 4 பொன்னையா உபாத்தியாயர் என்னும் ந. ச. பொன் னம்பலபிள்ளை. 5. மட்டுவில் வேற்பிள்ளை உபாத்தியாயர் 6. சி. வை. தாமோதரம்பிள்ளை. 7. நா. பொன்னையா 8. மாவிட்டபுரம் நவநீதகிருஷ்ணன். 9. சிதாராம சாஸ்திரிகள். 10. கல்லடி வேலுப்பிள்ளை. 11. குரும்ப சிட்டி கனகசெந்தி நாதன். 12. பண்டிதமணி சி. கண பதிப்பிள்ளை. 13. சுவாமி ஞானப்பிரகாசர். 14. மட்டு வில் வே. மகாலிங்கசிவம். 15. கந்தையா நவரத்தினம் 16. நவாலி சொர்ணலிங்கம் 17. நவாலி சோ. பால சுப்பிரமணியம். 18. வங்கிநிபுணர் C. லோகநாதன். 19. புலோலி நா. கதிரைவேற்பிள்ளை. 20. மட்டக் களப்பு சுவாமித்தம்பி மயில்வாகனனுர். 21. மல்லாகம் விசுவநாதர் கனகசபை.

## நல்ல இடத்துக்குப் போதல் வேண்டும்

மெய்ஞ்ஞானம் தலைப்பட்டவர்கள் மெய்ப்பொருள் பற்றிக்கூறும்போது, பிறந்தவர் என்ருயினும் ஒருநாள் இறத்தல்வேண்டும் என்பர். இதனை ஆழ்வார் ஒருவர் அழகாகக் கூறும்போது "வைகுந்தம் புகுவது மண்ணவர் விதியே" என்பர். Man is sentenced to death at the moment of his birth, only the education is delayed

இறந்தபின் நல்ல இடத்துக்குப் போகவிரும்பும் நாம் எங்கள் பிரயாணத்தையும் நல்லமுறையில் செய்தல்வேண் டும். புகைவண்டியில் வசதியாகப் பிரயாணம் செய்வ தற்கு மூலை ஆசனம் பிடிப்பதற்கு நம்மவர் முருங்கைக் காய்க்கட்டுடன் படாதபாடுபடுதல் தெரிந்ததே.

எங்கள் பிரயாணத்தின்போது உடல், அறிவு உள் ளம் என்னும் மூவகைப் பாகுபாடும் ஆனந்தம் தரு மாறு அமைதல்வேண்டும். இம்மூவகைப் போக்குகளில் உடலுக்குக் கர்மமார்க்கமும், அறிவுக்கு ஞானமார்க்க மும், உள்ளத்துக்குப் பக்திமார்க்கமும் வேண்டும். இறை வனைக் கண்டு நன்கு துய்த்தற்கு விஞ்ஞானம், மெய்ஞ் ஞானம் இலக்கியம், கலை, தத்துவம் ஆக எல்லாம் சைவ சமயத்தில் அருமையாக அமைந்துள்ளன.

Science is bat a sense of curiosity about life, religion is a sense of reverence for life, literature is a sense of wonder at life, art is a taste for life while philosophy is an attitude towards life. Education raised to the power of infinity is religion.

இனிசுகரின் அடக்கம், அரிச்சந்திரனின் வாய்மை, நாயன்மார்களின் தியாகம் எல்லாம் எமக்கு நல்ல இடம் பிடித்துத் தரத்தக்க சாதனைகள்.

## என்சொல்லி இரங்கி அழுவோம்

பெரும் பேராசான் பேராசிரியன், சந்திரசேகரன், இலங்கைக்கே கல்வியுலகில் பெருமை தந்தோன், கல்வித் துறையின் கலங்கரை விளக்கம், அவன் பிரிவைப் பூமி பொறுக்குமோ? பூலோகம் தாங்குமோ? மாவலி நீர்போல் கண்ணீர் பெருக்கிக் கதறியழுதாலும் தீருமோ அவன் பிரிவுத் துயரம்.

"விண்தங்கி நின்றனையோ வியன்மோகத்
துற்றனையோ விண்ணுேர் நாட்டின்
கண்தங்கி நின்றனையோ கனைகடலிற்
புகுந்தனையோ கமலப் போதில்
தண்தங்கு மொழித்திருவாழ் அரியுலகம்
சென்றனையோ சான்ருேர் யாரும்
மண்தங்கி நின்றுருக எங்குற்ருய்
மதிப்புலவர் மதிக்கும் கோவோ"

[நாற்பது ஆண்டுகளுக்கு முன் மகாத்மா காந்தியடி கள் மறைந்த போது செகவீரபாண்டியனுர் பாடியவை உன் மறைவை இன்று நினைவுபடுத்துகின்றன.]

"தன்னுயிர் நேர்போனுலும் தான்பிறர்க்குத்
துயர்செய்தல் தவறும் என்று
மன்னுயிர்க்குத் தெளிவாகக் கருணைவழி
போதித்து மதிமுன் காட்டிப்
பொன்னுயிர்க்கும் மொழிகளினல் புதியஒளி
செய்து வந்தாய் புனிதனுன
உன்னுயிர்க்கும் இவ்வாருேர் ஊறுவர
நேர்ந்ததே ஊழ்தான் என்னே!".

## நாக்கு

மனிதனுடைய உறுப்புக்களுள் நாக்கு மிகவும் உபயோகம் உள்ளது. உணவைச் சுவைப்பதைவிட அது உரையாடலுக்கு மிகவும் இன்றியமையாதது. எந்த மொழியையும் அட்சர சுத்தியாகப் பேசவும் வாசிக்கவும் அது உதவியானது. மொழித் தெய்வமாய சரஸ்வதி நாவையே இருப்பிடமாகக் கொண்டதால் நாமகள் என்றும், நாமடந்தை என்றும் வழங்குகிருள். இவ்வாருக நாக்கை அஃறிணை ஒன்றன்பால் எனவே நாம் வழங்கு கிருேம். ஆனுல் அது பெண்பால் எனவே கிரேக்கம், லத்தீன், இத்தாலியம், ஸ்பானியம், பிறெஞ், ஜேமன் முதலான மொழிகளில் வழங்குகிறது.

## சூடான பதில்

பிரித்தானிய பாராளுமன்றத்தில் அவ்வப்போது நடைபெறும் உரையாடல்கள் சூடானவை, விவேகபூர்வ மானவை, விறுவிறுப்பானவை. ஒரு சமயம் பிரதமர் மாக்மிலன் எதிர்கட்சித் தலைவரான வில்சனை வாழ்த்தி, "தாங்கள் நீண்டகாலம் தங்கள் ஆசனத்தை அலங்கரிப் பீர்களாக" என்ருர். "நன்றி! ஐயா நன்றி! நான் தாங்கள் குறிப்பிட்ட வண்ணம் இந்த ஆசனத்தைச் சூடேற்றிப் பக்குவப்படுத்தி உங்களுக்கே இருக்கத் தருவேன் நன்றி"

★ அகங்காரத்தை விட்டவனுக்குத் துன்பமில்லை ★

## அகராதி

அகராதி என்பது ஒரு மொழியில் உள்ள சொற்களுக்கு அம்மொழியில் நேர் கருத்துக் கூறும் சொற்களைக் கொண்டனவும், வேறு மொழிகளின் நேர்ப் பதங்கள் கூறும் அமைவிலும் அமைந்த ஒரு நூலாகும். அது அகரம் என்னும் முதலெழுத்து முதல் இறுதி எழுத்து வரையில் உள்ள சொற்களுக்கு விளக்கம் கூறுவதால் அகராதி எனப் பெயர் பெற்றது. அதை ஆங்கிலத்தில் டிக்சனறி என வழங்குவர். லத்தீன் மொழியில் டிக்சனேறியஸ் என்பது சொற்களின் தொகுதியாகும். அங்ஙனம் பார்க்கும்போது தமிழில் நிகண்டு என்பது ஒரு சொல்லுக்குரிய பலவாய நேர்க் கருத்துக்கள் அடங்கியதாகும். அது செய்யுளுருவில் உள்ளது. ஆங்கிலத்தில் அகராதி சொற்களின் கருத்து, அவற்றின் உச்சரிப்பு, அவற்றின் மூலம் என்பனவாதிய கருத்துக்களைக் கூறும். அதற்குக் காரணம் ஆங்கிலம் பெரும்பாலும் லத்தீன், கிரேக்கம் முதலிய சொற்களைக் கொண்டதாகும்.

லத்தீன் மிகப்பழைய மொழி. அது உரோமராச்சியத்தின் உத்தியோகமொழி. இங்கிலாந்தில் 1362 வரை லத்தீன் உத்தியோக மொழியாயிருந்தது. இன்று அது வழக்கற்ற மொழியாய் வேறு மொழிகளுக்கு இடங் கொடுத்துள்ளது. முன்னர் ஆங்கிலப் பாடசாலைகளில் இலங்கையிலும் ஆறும் வகுப்பு முதல் லத்தீன் கற்பிக்கப் பெற்றது. தமிழருள் பலர் லத்தீன் கிரீக் நிபுணராயிருந்தனர். பருத்தித்துறையைச் சேர்ந்த வி. துரைசுவாமிப் பிள்ளை என்பார் கேம்பிரிட்ஜ் பல்கலைக்கழகத்து முதுமாணிப்பட்டத்தில் இம்மொழிகளை அறிந்தார்.

யோன் காலண்ட் என்னும் ஆங்கிலேயர் 1225 ஆம் ஆண்டில் லத்தீன் மொழியில் ஓர் அகராதி தயாரித்தார். அதுவே மிகப்பழைய அகராதி. ஆங்கிலத்தில் றிச்சாட் ஹீலட் என்பவர் 1552 இல் ஓர் அகராதியைத் தயாரித்தார்.

இன்று ஆங்கிலத்தில் பலவிதமான அகராதிகள் உள்ளன. ஒக்ஸ்போட் என்னும் பெயரில் பல அளவிலான அகராதிகள் உள்ளன. மிகப்பெரியது பன்னிரு தொகுதிகளில் 15,487 பக்கங்களைக் கொண்டது. இதைவிட வெப்ஸ்ரர், தோண்டைக், பிளாக்கீஸ், கொலின்ஸ் முதலிய பெயர்களில் அகராதிகள் உள்ளன. யோணசன் என்னும் பெரும் புலவர் தயாரித்த இலக்கிய அகராதி உலகப்புகழ் பெற்ற நூல். அது ஒரு சொல்லுக்கு நகைச் சுவையாக நல்ல ஆங்கிலத்தில் பொருள் கூறி விளக்குவது. மூக்குப்பொடி என்றால் என்ன என அவர் விளக்கியமை அருமையாயுள்ளது.

## சுற்றுப்புறமும் சுற்றுடலும்

மனித வாழ்வுக்குச் சுற்றுடல் அமைவு இன்றியமையாதது. பழைய காலத்தில் பெரிய மன்னர்கள் தங்கள் மக்களை மகரிஷிகளுடன் மகிழ்ச்சிகரமாக இயற்கைச் சூழலில் வாழ்ந்து கற்பதற்கு வழிவகை செய்தனர். இன்று சத்தங்களும் சந்தடிகளும் அழுக்குகளும் நிறைந்த நகர மாந்தரின் பிள்ளைகள் நரகச் சூழலில் வாழ்ந்து படிக்கிறார்கள். நகரத்தை நரகமாக்குபவர் நாமேதான். இந்த நரகச் சூழலைச் சாதகமாகக் கண்டவர்கள் பன்றிகளும் வளர்க்கிறார்கள்.

வீதியோரங்களில் பெரிய வீட்டுப் பெண்கள் சகல விதமான குப்பைகளையும் அழுக்குகளையும் கொண்டு வந்து தெருவில், எதிர்ப்புறத்தில் கொட்டுகிறார்கள். ஆடு மாடு வளர்ப்பவர்கள் காலையில் பாலைக் கறந்தவுடன், கால் நடைகளை தெருவழியே கஞ்சல், குப்பைகளை மேய்ந்துவரத் துரத்திவிடுகிறார்கள். முக்காற்பரப்பில் மூன்று அறை வீடு கட்டியவர்கள் முழு அழுக்குகளையும் தெருவிலே குவிக்கிறார்கள்.

சூழலை அறிந்து வாழ்வதற்கு மனிதருக்கு மூளை இல்லாமல் போகவில்லை. இவர்கள் மூளையைப் பயன்படுத்துவதில்லை. நாய் சூழலை அறிந்து படுக்கிறது. பூனை சூழலை உணர்ந்து புகுகின்றது. வௌவால் சூழலை அறிந்து பறக்கிறது. கடலில் சில மீனினங்கள் சீல், டால்பின் சாதகமான நீரை அறிகின்றன.

சின்னஞ்சிறு தேனீ எமக்கு புலப்படாத கதிர் ஒளியைக் கண்டுகொள்கின்றன. அன்றி மகரந்தமுள்ள மலர்களை அறிகின்றன. எறும்புகள் அற்புதமாக இடங்களை மாற்றிக் கொள்கின்றன.

பாம்புகள் சுகாத்தியத்துக்குச் சாதகமான வெப்ப வேறுபாடுகளை நன்கறிந்து ஊருகின்றன. எல்லாவற்றிலும் மேலாகப் பல்லாயிரம் மைல் தூரம் கடந்து சென்று வாழ்ந்து மீளும் பறவையினங்களின் உச்சவேகம் எமக்கிருந்தால் நாம் குப்பைகளைத் தெருவில் கொட்டமாட்டோம். வீதியைப் பாழாக்கமாட்டோம்.

## பகைமையை அழித்த பண்பு

சீனப்பெருவேந்தர் ஒரு சமயம் தன் நாட்டில் தூரத்து மாநிலத்தில் கிளர்ச்சி உண்டானதைக் கேட்டு, தன் படைகளைத் திரட்டித் தானே முன் நடந்தார். போன வழியில் ''நண்பர்களே பாருங்கள் நான் பகைவர்களை வரைவில் அழித்துவிடுவேன்'' என்று உற்சாகமூட்டி நடந்தார்.

பகைவர்களைக் கண்டதும், ''வாருங்கள் மக்களே உங்களைக் காணவே வந்தேன்'' என்று வரவேற்றுப் போர் புரிந்து வெற்றியீட்டினர். தோற்றவர்களைக் கௌரவமாக அருகழைத்து, உங்களுக்கு என்ன வேண்டும்? என்று ஆதரவாகப் பேசி அவர்களை நண்பர்களாக்கிக் கொண்டார்.

இதைப் பார்த்து வியந்து நின்ற படைவீரர்கள் ''பேரரசரே! தாங்கள் என்ன பேசிக்கொண்டு வந்து என்ன செய்தீர்கள்? என்று கேட்டார். அதற்குப் பேரரசர் ''ஆம் பகைவரை அழித்ததற்குப் பதிலாகப் பகைமையை அழித்தேன் பார்த்தீர்களா அவர்கள் எங்கள் நண்பர்களாகி விட்டார்கள் என்றார்.

No washing is complete without
MILK WHITE BLUE SOAP

## சுவிற்சலாந்து

அந்த அற்புத ஐரோப்பிய நாட்டுக்குத்தான் எத்தனை பெருமை, தன்மை, இயல்பு. மலைவளம் நிரம்பியநாடு. கடல் வளத்தைக் காணாத நாடு. உடல் உழைப்பால் உயர்ந்த நாடு. உலக விவரங்களில் தலையிடாத நாடு. மதிப்புக்குரிய நாடு, மொழிவளம் நிரம்பிய நாடு. நல்லவர்கள் வாழும் நாடு.

பெரிய நாடுகளை எல்லையாகக் கொண்ட நாடு. பிரான்ஸ், அவுஸ்ரேலியா, இத்தாலி, ஜேர்மனி எல்லைக் காவலாளிகளாயுள்ள நாடு. நாட்டில் இருபத்தைந்து மாநிலங்கள் உள்ளன. மாநிலங்கள் ''கான்ரன்கள்'' என வழங்கும். ஜேர்மன்மொழி அதிக மாநிலங்களில் வழங்கும்

மலைவளம் நிறைந்த நாட்டில் பெரிய வாவிகள் உள்ளன. ஜெனீவா, கொன்ஸ்ரன்ஸ், பியன், லூசேண். சூறிச், நியூசட்டல், வாலன் என்பன பெரியவை. வாவிகளில் ஊற்றெடுத்து நிலத்தின்கண் பாயும் சுத்த நீர்ப் பெருக்காய ஆற்றுவளமும் அதிகமுள்ள நாடு. ரோன், ஆர், ருயஸ், றைன், இன்ரிசினோ என்பன ஆறுகள். ஆர் என்பது (*Aar*) இது எங்கள் ஆறுதானோ? தமிழ்ப் பெயர் தானோ? ஒப்படை செய்து பாருங்கள்.

காடும் மலையும் கவின்பெரு சோலையும், விளைநிலமும் விளங்கும் நாட்டில் கைத்தொழில் அதிகமாக நிலவுகிறது. பசுமையான நாட்டில் பால்வளமும் உண்டு. மணிகட்டிய மாடுகள் மேயும் போது, மலையடிவாரமெங்கும் எதிரொலி இனிமையானதாகும்.

ஆறு என்னும் நதிக்கரையில் பேண் நகரம் அழகானது தலைநகரானது. அது 900 ஆண்டுப் பழைமையானது. சுவிற்சலாந்து ஒருகாலத்தில் கடிகாரத்தால் புகழ் பெற்றது. இன்று வங்கியால் பெருமை பெற்றுள்ளது.

## இந்தியக் கலைகள்

பரந்துபட்ட பாரத நாட்டில் மூலை முடுக்கெங்கும் பல கலைகள் வளர்ந்து பிரகாசித்து மக்கள் வாழ்வில் ஒளி யூட்டியுள்ளன. அறுபத்து நான்குகள் என வழங்கிய கலைகளின் தனித்துவம் இறையனுபவத்தில் முடியும். கலையில் இறைவனைக் கண்டவர்கள் இந்தியர்கள். கல்லிலும், செம்பிலும் இறைவன் களிநடனஞ் செய்யுமளவில், கைத்திறன் படைத்தவர்கள் இந்தியர். இந்தியக் கலைகள் அவர்களின் சொந்தக் கலைகள்.

ரூபபிரதீப என்பது கலை விளக்கஞ் செய்யும் ஒரு நினைவு நூல். இத்தாலியில் தோன்றிய சுவிஸ் தம்பதிகளின் புதல்வியாய அலிஸ் போனர் என்னும் பெண்மணி 1936 ஆம் ஆண்டில் கங்கைக் கரையில் காசி நகரில் குடியேறி 43 ஆண்டுகள் அங்கே தங்கியிருந்து, கோணர்க சூரியனார் கோயிலமைப்பைக் கருத்திற் கொண்டு ஆராய்ந்தவர். அவ்வாராய்ச்சி அவரின் நினைவாக வெளிவந்தது.

### (உலக ஒலிம்பிக் ஆட்டங்கள்)

இவ்வருடம் ஒலிம்பிக் ஆட்டங்கள் ஓய்ந்த பின், அடுத்த ஆட்டம் 1988 இல் நடைபெறும். அதற்கு அடுத்த ஆட்டம் 1992 இல் நடைபெறுவதற்கு இந்தியா விருந்தாளியாக இருப்பதற்கு விரும்பி இப்போதே அழைப்பு விடுத்துள்ளது.

## W. R. (E) N. S.

வீட்டுக்குள்ளே பெண்ணைப் பூட்டிவைத்த விந்தை மனிதர் போயகலப் பெண்களே பல துறைகளிலும் கால் வைத்துக் கைகொடுப்பாராயினர். ஒருகாலத்தில் வெள்ளைக்காரப் பெண்கள் கடற்கரையில் சேர்ந்து சமையல் முதலாய பலவகைச் சேவைகளையும் செய்தார்கள். அவர்களின் நடமாட்டத்தால் கடற்படை வீரர் தங்கள் வீடுகளில் வாழ்ந்ததாக மனவமைதி கொள்ளும் சூழல மைந்தது. அன்று 1918 ஆம் ஆண்டில் 5000 பெண்கள் அச்சேவையிலீடுபட்டிருந்தார்கள்.

பின்னர் இரண்டாம் மகாயுத்தத்தில் 1944இல் 75000 பெண்கள் இச்சேவையில் ஈடுபட்டிருந்தனர். இவர்கள் வண்டியோட்டமும், ரைப்புடிக்கவும், வானிலை அவதானிக்கவும் இன்னபல வேலைகள் செய்யவும் பயின்றிருந்தனர். பெரும்பாலானோர் ஆண்பாலராயே வேலைகள் செய்தனர்.

## பறங்கி நாகரிகம்

தமிழர் ''ஊத்தைப் பறங்கி'' எனவும், சிங்களவர் ''அடிமைப் பறங்கி'' எனவும்வழங்கிய ஒருவகைப் பறங்கியர். ''பறங்கிப்புண்'' என்னும் நோயையும் கொண்டு திரிந்தவர்கள்.

அவர்களுக்கு மாட்டிறைச்சியில் விருப்பம் அதிகம். பசுத்தீவாய நெடுந்தீவுப் பசுக்களைப் பகாசூரன் போலத் தின்றவர்கள். தமிழ்நாட்டுப் பட்டிகளையும் பதம் பார்த்தார்கள்.

பின்னர் யாழ்ப்பாணத்துக் கோயிற் பற்றுகளில் வீட்டுக்கொரு பசு கொடுக்கும் வண்ணம் பறையுமறைந்தார்கள்.

மாட்டிறைச்சியாம் பறங்கிக்கு
மானும் இறங்காதாம்
சுட்ட கருவாடாம் பறங்கிக்கு
சோறும் இணங்காதாம்

என்று பாடியவர்கள் பறங்கியரை மதிக்கவில்லை. ஆனால் சிலர் பறங்கிப் பழக்கத்தில் இறைச்சி தின்னப் பழகினர்கள். இறைச்சியில் என்னவோ இருக்கிறதாம். அதுஒன்றும் இல்லை. உண்மையும் அல்ல. உண்மை இதோ

உடல் வளர்ச்சிக்கு உலோக உப்புகள் தேவைதான். கல்சியம், பாஸ்வரம், இரும்பு எல்லாம் தேவைதான். தேவையானால் பசு மாட்டைக்கடிக்கத் தேவையில்லை.

கல்சியம் வேண்டுமா? பாலில் உண்டு. இன்னும் பயறு, அகத்தி, முருங்கை, கீரை, தானியங்கள் எல்லா வற்றிலும் உண்டு. நிறையவுண்டு.

பாஸ்பரம் வேண்டுமா? பயறு, தானியம், எள், கடலை முதலியவற்றில் உண்டு.

இரும்புச்சத்து வேண்டுமா? கீரைவகைகள், அகத்தி முருங்கை இனங்களில் உண்டு. இன்னும் முள்ளங்கி. ரேணிப்ஸ், கரட், சேப்பங்கிழங்கு என்பன உள்ளன. சோயா அவரையைவிட வேறெதுவும் வேண்டாம்.

மாட்டைத் தின்று மனித குலத்திற்கு மாசு கற்பிக்காதீர்கள். பறங்கி நாகரிகம் பறந்தோடிப் போய்விட்டது. தமிழ் நாகரிகம் தலையெடுத்துள்ளது.

★ கடமையிலிருந்து ஓய்வு எடுத்தல் ஆகாது ★

## கோண்ட்வானு லெமூரியா

மேற்கில் தென் அமெரிக்கா, நடுவில் ஆபிரிக்கா கிழக்கில் லெமூரியா, தெற்கில் அன்டாட்டிக் என்பன யாவும் மிகப்பெரிய நிலப்பரப்பு. இவற்றில் இடையிடை கடல் கொண்டவைபோக எஞ்சியவற்றில் லெமூரியாவும் ஒன்று. அதுவும் கடல் கொள்ளக் கண்டவன் தமிழன். அவன் தெற்கிலிருந்து வடக்கே சென்று மொஹஞ்சதரோவைக் கண்டு மீண்டும் தெற்கே வந்தவன்.

நீரிலே தோன்றியஉப்பு நீரிலே கரைவது போல நீரிலே தோன்றிய நிலம் நீரிலே கரைந்ததும் உண்டு.

## அந்தத் தேசாதிபதி

அவர் மாட்சிமை தங்கிய ஹேபெட் யேம்ஸ் ஸ்ரான்லி. அவர் நல்லவர். தமிழரை நேசித்தவர். யாழ்ப்பாணத்துக்குப் பலமுறை வந்தவர். பரமேஸ்வராக் கல்லூரியில் உரை நிகழ்த்தியவர். அவர் 1927 முதல் 1931 வரை தேசாதிபதியாய் இருந்தவர். அவருடைய நினைவாக எங்கள் மத்தியில் ஒரு மகா வித்தியாலயமும் ஒரு பெரிய வீதியும் உள்ளன. அவர் காலத்திலேதான் காந்தியடிகள் இலங்கைக்கு வந்தார். மில்க்வைற் தொழிலகம் ஆரம்பிக்கப் பெற்றது. தொழிலதிபர் கனகராசா அவர்களும் பிறந்தார்.

அக்காலத்திலேதான் டொனமூர்த்திட்டம் விவாதிக்கப்பட்டு இரண்டே இரண்டு வாக்குகளால் ஏற்றுக்கொள்ளப்பட்டது. ஸ்ரான்லி அவர்களுக்கு முன் இராணி மாளிகையை அலங்கரித்தவர் சாள்ஸ் கிளிபோர்ட் என்பவராவர். ஸ்ரான்லி அவர்களுக்குப் பின் வந்தவர் கிறேம் தோம்சன் என்பவராவர்.

## நல்ல தமிழ் எழுதுவோம்

1. அடகு
2. ஐயர்
3. காக்கை
4. குருடு
5. கோடரி
6. கோதுமை
7. சுவர்
8. செலவு
9. செவிடு
10. தவளை
11. செய்தி
12. தளிர்
13. நாற்று
14. நேற்று
15. நுங்கு
16. புடைவை
17. பிட்டு
18. பூசுணை
19. வலம்
20. வளவு
21. வேட்டி
22. அடைமழை
23. அரமனை
24. அரிவாள்
25. ஆயுதம்
26. இத்துணை
27. உரித்து
28. எண்ணெய்
29. ஒருகால்
30. ஒருத்தி
31. கம்பளி
32. கடாரம்
33. கேடகம்
34. கைம்மாறு
35. கோவணம்
36. கோத்தல்
37. சமையல்
38. சிவப்பு
39. தலையணை
40. திருகாணி
41. திபாவலி
42. பட்டினி




## இந்துநாகரிகம்

கல்விப் பொதுத்தராதர வகுப்பினர் முதலான மாணுக்கர் மாணுக்கியர் தாமே படித்து விளங்கக் கூடிய பெரிய விடயங்கள் பல இந்தச் சஞ்சிகையில் வெளிவந்துள்ளன. மிகவும் பழைமையும் வியாபகமும் ஆழமும் அமைந்த பண்பாட்டை அடிப்படையாகக் கொண்ட இந்துநாகரிகத்தை நாம் பாத்தி கட்டி இவ்வளவு தான் என்று குறுகத்தறித்துக் குறிப்புகளை மாத்திரம் படித்துப் பாடமாக்குவதிற் பார்க்க, விசாலமாகப் படித்தல் நல்லது எனக்கண்டு, இந்தச் சஞ்சிகை வெளிவந்துள்ளது.

இதுவரை மூன்று இதழ்கள் மலர்ந்துள்ளன. ஒவ்வொன்றும் இருபத்து நான்கு பக்கங்களைக் கொண்டதாய் ஐந்து ரூபாவுக்குக் கிடைப்பதாய் உள்ளது. இதுவரை இதற்குப் போதிய விளம்பரம் கொடுக்கவில்லை. பழைய பிரதிகள் ஓரளவு கையிருப்பில் உண்டு. எல்லாப் புத்தக சாலைகளிலும் பெற்றுக் கொள்ளலாம். இதன் நான்காம் இதழ் விரைவில் வெளிவரும். அதில் தூர கிழக்கு நாடுகளில் இந்துநாகரிகம் பரந்த வரலாறு விபரமாக ஆராயப் பெறும். முன்னரே இந்துநாகரிகம் என்னும் நூற்றெருகு திகள் எழுதிய க. சி. குலரத்தினம் இந்த இதழ்களையும் எழுதுகிருர்.

## பழைய பகிடி

### தமிழ்நாட்டு பி. சி. ஜோசப்

ஓர் இளைஞன் வீதி வழியே ஒரு கழுதையை ஓட்டிக் கொண்டு போனுன். அவனை இடைமறித்த பட்டாளத்துக் கூலிப்படைகள், அடோ! உன் அண்ணுவை எங்கே கொண்டு போகிருய்? "அவர் பட்டாளத்தில் சேராமல்' தடுப்பதற்காக வீட்டுக்குக் கூட்டிக்கொண்டு போகிறேன்'

ஒருவர் தன்னுடைய நாய் பின்தொடர வீதி வழியே போனுர். அவரை வழிமறித்த ஒருவர், "இவ்வழியால் நாயைக் கொண்டு போக முடியாது." இது என்னுடைய நாய் அல்ல. "அப்படியானுல் அது ஏன் உனக்குப் பின்னுலே வருகிறது." 'நீயும் தானே எனக்குப் பின்னுலே வருகிருய்?

மனேவசியக்காரன் ஒருவன் ஒரு கூட்டத்தவரிடை தன் வித்தையைக் காண்பித்த போது, முன் வரிசையில் இருந்த ஒருவரைச் சுட்டிக்காட்டி, "பாருங்கள் இப்போது இவருடைய நினைவை எல்லாம் மறக்கச் செய்து விடுகிறேன்." கூட்டத்தில் இருந்த மற்ரெருவர் "வேண்டாம்! வேண்டாம்" இவர் எனக்கு நூறு ரூபா கடன் தர வேண்டும்."

★ துன்பத்தை நீக்கிவிட்டு இன்பத்தை அடையமுடியாது ★



"அகழ்வாரைத் தாங்கும் நிலம்போலத் தம்மை
இகழ்வாரைப் பொறுத்தல் தலை,,


## திருக்குறளைத் தினமும் படியுங்கள்




நாளும் நற்பணி செய்திட உங்கள்
ஆதரவை நாடும்
மில்க்வைற் ஸ்தாபனத்தாரின்

**நீல சோப்பைப் பாவித்து**

அதன் மேலுறைகளில் உள்ள
திருக்குறளைச் சேகரித்துக் கொடுத்து
அழகிய

**திருவள்ளுவர் ஸ்ரிக்கரைப்**
பெற்றுக்கொள்ளுங்கள்.

**மில்க்வைற் தொழிலகம்**
த. பெ. இல. 77
யாழ்ப்பாணம்: ☎ 23233


## எல்லாம் திராவிடம்

தமிழும் இதைச் சேர்ந்த இருபத்தாறு மொழிகளும் திராவிடமயம் என ஆராய்ந்துள்ளார்கள். அவை தமிழ், மலையாளம், துரு, தோடா, தோட்டா, குடகு, கன்னடம், துருபா, கொரகா, பெல்லாரி, துளு, தெலுங்கு, கோலமி, தாயக்கி, பார்ஜி, கடபா, கோண்டி, கொண்டா, பெங்கோ, மண்டா, கூயி, கூறி, குருக், மால்டே, பிராகு.

## பத்தாய்ப் பணிந்து பத்தாண்டு கண்டார்கள்

அப்பாலும் அடிசார்ந்து ஐரோப்பாக் கண்டத்து இங்கிலாந்து தேசத்திலே, லண்டன் மாநகரிலே சைவ முன்னேற்றச் சங்கம் அமைத்துப் பணிபுரியும் எம்மவர் பத்தாண்டு நிறைவு காணும்போது, நாமும் மனப்பூர்வமான பாராட்டையும் வாழ்த்தையும் கூறுகின்றோம். சென்றகாலத்துப் பழுதிலாத் திறத்தை நீங்கள் சென்ற நாட்டில் விளக்குவதைவிட வேறு சிறந்தபணியுமுண்டோ? அன்று தென்கிழக்கு நாடுகளில் எம்மவர் செய்த பணியை இன்றைய மேற்கு நாட்டவர்கள் மிகுந்த ஆர்வத்தோடு ஆராய்கிறார்கள்- கம்போடியா, தாய்லாந்து, வியட்னாம் லாவோஸ் எங்கும் சைவம் மணக்கிறது. இன்னும் சுமத்திரா, யாவா, பாலி தீவுகள் எங்கும் சைவம் கமழ்கின்றது. இந்தவகையில் மிக வடக்கே சைவப்பணி புரியும் நீங்கள் வாழவேண்டும். சைவமும் தமிழும் செழித்து வளரவேண்டும். வாழ்க.

## சுவாமி சிவானந்தரின் மணிவாக்கு

கோபத்தை அன்பினாலும், ஆசைகளைத் தூய்மையினாலும், பேராசையைத் தாராள மனப்பான்மையினாலும் கர்வத்தைப் பணிவாலும், அகங்காரத்தை இறைவனது சரணாகதியினாலும் வெற்றிகொள். உன்னிடம் இறைமை மிளிரும்.

பொறாமை, துவேசம். சந்தேகம், பழிவாங்கும் மனோபாவம், பெருமை, சுயநலம் முதலிய களையை அகற்றி அன்பை உனது இதயப் பூங்காவிலே பயிரிடு. அன்பின் சக்தி சொல்லில் அடங்காதது. அன்பின் ஆழம் அளக்க முடியாதது. அதனுடைய புகழோ வர்ணிக்க இயலாதது. அது தெய்விகமானது.

துன்பத்திலிருந்து விடுதலைபெறப் பிரார்த்தனை செய்யாதே. ஆனால், துன்பத்தைச் சகிப்பதற்கும் தாங்குவதற்குஞ் சக்தி வேண்டுமென்று பிரார்த்தனை செய்.

எந்த உயிர்க்குச் செய்யும் குரூரமும் ஈசனுக்குச் செய்யப்பட்டதே ஆகும். ஏனெனில் ஈசன் எல்லா உயிர்களிலும் வசிக்கிறார்.

ஒருவனுடைய கஷ்டத்திற்கோ துன்பத்திற்கோ மற்றொருவன் காரணம் அல்ல. ஏனெனில் ஒவ்வொருவனும் தன்னுடைய வினையின் பலன்களை அநுபவிக்கிறான்.

யாழ்ப்பாணம் சாந்தி அச்சகத்தில் அச்சிட்டவர் திரு. தி. நாகரத்தினம். யாழ்ப்பாணம் மில்க்வைற் சவர்க்காரத் தொழிலகத்தின் சார்பாக வெளியிட்டவர் "சிவநெறிப் புரவலர்" க. கனகராசா ஜே. பி. அவர்கள்
கௌரவ ஆசிரியர் திரு. க. சி. குலரத்தினம் 1-12-1987.